பக்கங்கள் 8.

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

தனிப்பிரதி விலை சதம் 6

# இலங்கை இந்தியன்

இலங்கை இந்தியரின் நலவுரிமைகளுக்காக உழைத்துவரும் ஓர் சிறந்த தமிழ் வாரப்பத்திரிகை

புதன் கிழமை தோறும் வெளி வருவது

THE CEYLON INDIAN

A WEEKLY JOURNAL WHICH CHAMPIONS THE CAUSE OF INDIANS IN CEYLON

Pubished Every Wednesday

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

"சாதி மதங்களைப் பாரோம்"

"யாமார்க்கும் குடியல்லோம்"

மலர் 1. | 1928-ம் வருஷம், நவம்பர் மீ 21 உ புதன்கிழமை. | இதழ் 21.

## மெய்ப்பொருள் மூன்று.

ப. ராமஸ்வாமி

[இச்சிறுகதை ஐஸக் பெரேஸ் என்னும் யூதமகாகவியால்எழுதப்பட்டதன் சுருக்கம். பெரேஸ் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வசித்த பெரும் புலவர். மேல்நாட்டு ஆசிரியர்கள் உயர்ந்த கருத்துக்களைச் சிறுகதை மூலமாய் வெளியிடுவதில் இணையற்றபுலமை வாய்ந்திருக்கிறார்கள். அத்தகைய கதைகள் சில இப்பத்திரிகையில் அடிக்கடி வெளிவரும். ப--ர்]

### நீதித்தராசு.

வெகு காலத்திற்குமுன் யூதன் ஒருவர் மரணமடைந்தார். அவனது பூதவுடல் கல்லறையில் புதைக்கப்பட்டது. சாமக்கிரியைகள் நடந்தேறின. இறந்தானுடைய ஆத்மா வானுலகை அடைந்தது. அங்கு அவன் அவ்வாத்மா செய்தநன்மையும் தின்மையும் விசாரிக்கப்பட்டு நீதிவழங்கப்படும்.

ஆத்மா நீதிஸ்தலத்தில் சென்றுநின்றது. எதிரில் ஒரு தராசு வைக்கப்பட்டிருந்தது. ஒரு தேவதூதன் வெண்மைநிறமான சாக்குப்பை கொணர்ந்து ஆத்மாவின் நற்கருமங்களை ஒவ்வொன்றாய் எடுத்துத் தராசின் ஒருதட்டில் வைத்துக் கொண்டிருந்தான். மற்றொருவன் கருமைநிறமான சாக்கிலிருந்து ஆத்மாவின் தீச்செயல்களை எடுத்துமற்றைத்தட்டில் வைத்துக்கொண்டிருந்தான். ஆனால் நமது ஆத்மாவின் பாபபுண்ணியங்கள் சரிசமமாகஇருந்ததால் இரண்டு தட்டும் ஒரேநிலையில் நின்றுவிட்டன. தராசின் நாக்கு மத்தியிலிருந்தது. அதுவரை இவ்வாறு நேர்ந்ததேயில்லை. ஏதாவது ஒருதட்டு மேலோ கீழோ சாய்ந்தே இருப்பது வழக்கம்.

பாவம் அதிகமாயிருந்தால் ஆத்மா நரகத்தில் தள்ளப்படும்; புண்ணியம் மிகுதியாயிருந்தால் அது சுவர்க்கத்தில் வைக்கப்படும். இந்நிலையில் என்செய்ய வேண்டுமென்று தெரியாது தேவதூதர் விழித்துக் கொண்டிருந்தனர். "மேன்மை தங்கிய நீதிபதி, தராசுமுள் சிறிதளவுகூட விலகாமல் நிற்கிறது!" என்று வினவினர். தூதர் 'ஆம்' என்றனர்.

உடனே நீதிபதி தீர்ப்பைப் படித்தார். அது வருமாறு:—"தீச்செயல்கள் நற்கருமங்களைவிட அதிகமாகாததால்— இவ்வுயிர்நிச்சயம் நரகத்திற்குரியதில்லை. ஆனால் புண்ணியமும் மற்றதைவிட அதிகமாயில்லாததால் சுவர்க்கமும் இதற்கில்லை. ஆதலால் இது இரண்டுமில்லாமல் வானுலகத்திற்கும் மண்ணுலகத்திற்கும் அலைந்துகொண்டிருக்கவேண்டும். கருணாமயமான பரம்பொருள் இதன்மேல் அருள்கூர்ந்து தம்மிடம் அழைத்துக் கொள்ளும் பொழுதுதான் இதற்கு விமோசனம்."

உடனே கச்சேரி வேலைக்காரன் ஆத்மாவை வெளியே கொண்டு செலுத்திவிட்டான். தனக்கு நேர்ந்தகதியை எண்ணி ஆத்மா வருந்திக் கொண்டிருந்தது. ஒன்றுமில்லாமல் நிற்பதைவிட நரகத்திற்குச் சென்று சுவர்க்கத்தில் ஊசலாடுவதைப் பார்க்கிலும் எவ்வித துன்பத்தை அனுபவிக்கலாமென்பது அதன் எண்ணம். வேலைக்காரன் அதன் இன்னலைக்கண்டு இரங்கி, "உயிரே! அழுவதில் பயனில்லை. உனக்கு முத்தியில் ஆசையிருந்தால் நான் சொல்வதைக்கேட்டு நட. உனக்காகப் பரிந்து பேசுபவர்கள் இங்கு உனக்கு முன் வந்திருக்கும் புண்ணிய ஆத்மாக்களே. அவர்களுக்கு மெய்யான பொருளைப் பரிசு பெறுவதில் விருப்பம் அதிகம். நீயும் மண்ணுலகிற்குச் சென்று மெய்ப்பொருள் மூன்று கொணர்ந்து அளித்தால் உனக்கு சுவர்க்கவாயில் திறக்கப்படும். அவர்கள் நற்குடியைக் கவனியார்கள், நல்வாழ்வையேவிரும்புவார்கள்." என்றான். ஆத்மா கீழ் நோக்கிப் பறந்து வந்துவிட்டது.

### முதற்பரிசு.

அந்த ஏழை ஆத்மா பிறர்கண்ணுக்குப் புலனாகாமல் பூமியெங்கும் சுற்றிப்பார்க்கத் தொடங்கியது. கிராமங்கள், பட்டணங்கள் — விளக்குவைத்த வீடெல்லாம், மனிதருள்ள இடமெல்லாம் அலைந்து திரிந்தது. இறைவனடியார்க்குகந்த பொருளை நாடி நாடிச்சென்றது. வாரங்கள் மாதங்களாய் மாதங்கள் வருஷங்களாய்க் கழிந்தன. நகரங்கள் அழிந்து தரைமட்டமாயின; குப்பை கோபுரமானது, கோபுரம் குலைந்து வீழ்ந்தது. அவ்வளவு அதிககாலம் கழிந்தது! மெய்ப்பொருள் ஒன்றும் தென்படவில்லை. ஆத்மா, "உலகத்தில் பாவம் பெருகிவருகிறது. ஆருயிர்கள் பாவத்திற் கிடந்து உழல்கின்றன. நமக்கு மெய்ப்பொருள் எங்கு கிடைக்கப்போகின்றது? பிரஷ்டம் செய்யப்பட்ட நீசனாய் அலையவேண்டியதே நம்விதி" என்று கூறிவருந்தியது.

அச்சமயம் ஒருவீட்டு மேல்மாடியிலிருந்து திடீரென்று பெரியவெளிச்சம் தென்பட்டது. அங்கு திருடர்கள் ஒருபணக்காரனைக் கொள்ளையிட்டுக் கொண்டிருந்தனர். ஒருவன் கையில் தீவர்த்தி வைத்துக்கொண்டு நின்றான். மற்றொரு கள்வன் அச்செல்வனுடைய மார்புக்குநேரே வாளைவைத்துப் பயமுறுத்திக் கொண்டிருந்தான். "யூத! உடலைச் சிறிது அசைப்பாயாகில் வெட்டு விழுவது நிச்சயம்" என்று அவன் கூறினான். மற்றவர்கள் இரும்புப் பெட்டிகள், அலமாரிகள் முதலியவற்றிலிருந்த பொருளையெல்லாம் கவர்ந்தனர்.

இந்நிலையில் அச்செல்வன் சிறிதுகூட அசையவில்லை, கலங்கவுமில்லை. ஏதோ நடப்பதில் ஒன்றும் தனக்கு சம்பந்தம் இல்லாததுபோல் அவனிருந்தான். முகத்தில் எவ்விதக் கலக்கமுமில்லை. "செல்வம் பிறக்கும்பொழுது நம்முடன் வந்ததில்லை; இறக்கும்பொழுதும் கொண்டுபோவதில்லை. இடை நடுவே ஈசன் தந்தது. அவனே எடுத்துக் கொள்ளுகிறான். அவன்தான் வாழ்க" என்று அவன் எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது கள்வர் தங்கள் வேலையை முடித்துக் கொண்டு, கிடைத்த பொன், வெள்ளி முதலியவற்றை மூட்டை கட்டிக் கொண்டிருந்தனர். சிலகள்வர் அங்கு ஒருமூலையில் மிகரகசியமாக, மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒருசிறுபையையெடுக்கச் சென்றனர். இதுவரை அலட்சியமாயிருந்த யூதன் உடல் நடுங்கி, மெய்சிலிர்த்துத் தன் வலது கையை அதை எடுக்க வேண்டாமென்று சொல்வதற்காக நீட்டினான். 'வேண்டா' மென்று அவன்கூறுவதற்கு முன் கூரியவாள் அவன் நெஞ்சில் பாய்ந்துவிட்டது. அவன் இதயத்திலிருந்து இரத்தம்ஆறாய்ப்பெருகியது. அப் பையும் உதிரத்தில் நனைந்து மிதந்தது. அவன்தளர்ந்து கீழேவிழுந்து மூர்ச்சையானான். திருடர்கள் அவசரமாக அப் பையைக் கிழித்து உள்ளே பார்த்தனர். அதில்தான் மிகஉயர்ந்தபொருள் இருக்கும் என்பது அவர்கள் தீர்மானம்!

கள்வர் என்னபெருந்தவறுசெய்துவிட்டனர்! பையில் தங்கமுமில்லை. வெள்ளியுமில்லை. இரத்தம் வீணே சிந்தப்பட்டது உலகத்தார் மதிக்கும் பொருளொன்றும் அதிலில்லை. யூதர் க்ஷேத்திரமான புண்ணியபூமியிலிருந்து கொண்டுவரப்பட்ட மண்தான் அதிலிருந்தது. யூதன் தான் கல்லறையில் அடக்கம் செய்யப்படும் பொழுது தன்முகத்தில் தெளிக்கச் செய்வதற்காக அதை வைத்திருந்தான். அவன் உயிரினும் அதிகமான ஆசையை அப்புனித மண்ணில் வைத்திருந்ததால் அவன் உதிரம் சிந்தப்பட்டது... இவையனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த நம் ஆத்மா இரத்தம்கலந்த அம்மண்ணிற்கொஞ்சம் எடுத்துக் கொண்டு ஓடிச்சென்றது. இது ஆன்றோர்க்குகந்த பொருள் அல்லவா? சுவர்க்கவாசிகள் அதைஏற்றுக்கொண்டனர். இன்னும் இரண்டுபரிசுகள் பாக்கி யிருந்தன.

### இரண்டாம் பரிசு.

ஆத்மா மறுபடிஉலகில் திரியஆரம்பித்தது. உலகம் பாவபண்டாரமாக விளங்கியது. நன்மை குறைந்து கொண்டேவந்தது. தின்மை எங்கும் மலிந்து காணப்பட்டது. மனிதர்களுக்குநான் அயோக்யர்களாய்ச் சிறுமைப்பட்டுக் கொண்டே வந்தனர். எங்குபார்த்தாலும்பிறப்புக்களும்,இறப்புக்களும் விவாகங்களும், விவாகரத்துக்களும் காணப்பட்டன. ஆனால் உலகம்மட்டும் கீழ் நோக்கியே சென்று கொண்டிருந்தது. பல்லாண்டுகள் கழிந்தன. "அறம் நசித்துப்போன இவ்வுலகில் நமக்கு இன்னொரு மெய்ப்பொருள் எவ்வாறு கிடைக்கும்?" என்றுஆத்மா கலங்கிக் கொண்டிருந்தது.

திடீரென கொம்புகள், தந்தரிகள் ஊதப்பட்ட முழக்கம் கேட்டது. ஆத்மா கீழ்நோக்கிப்பார்த்தது. கீழேஒருபழைய ஜெர்மானியநகரம் இருந்தது. அங்கு ஒருநீதிஸ்தல வாசலில் பெருங்கூட்டம் நின்றுகொண்டிருந்தது. ஆத்மா அங்குசென்று நடப்பதைக் கவனித்தது. நீதிஸ்தலத்தில் ஆடம்பரமாய் அலங்கரித்துக்கொண்டுஒருநியாயாதிபதி வீற்றிருந்தார். சேவகர்களும் தாணுக்காரர்களும் குழுமிநின்றனர். யூதவகுப்பைச் சேர்ந்த ஒரு வாலிபப் பெண்கைதிக்கூண்டில் நிறுத்தப்பட்டிருந்தாள். பத்து வேலைக்காரர் ஒருபெரிய வெள்ளைக்குதிரையை அவளருகே நிறுத்திப்பலமாய்ப் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்பெண்ணின்மேல் குற்றம் சாட்டப்பட்டது. விசாரணை முடிந்தது. நியாயாதிபதி தீர்ப்பைப்படித்தார்.

அப்பெண் யாதொரு குற்றமும் புரியாதவள். பண்டைக் கிறிஸ்தவர்களால் யூதர்கள் பலநாடுகளில் துன்புறுத்தப்பட்டார்கள். காரணமின்றி அவ்வாறு அநியாயமாய்த் துன்புறுத்தப்பட்டவர்களில் அப்பெண்ணும்ஒருத்தி. கிறிஸ்தவர்கள் தெருவில்ஊர்வலமாக மாதா கோயிலுக்குச் செல்லும்பொழுது அப்பெண் ஒரு ஜன்னல் வழியாகவெளியே பார்த்தாள் என்றதே அவள்மேல் சாட்டப்பெற்ற குற்றம். அவள் அழகியமுகம்வெளியே தெரிந்ததால் அதைக்கண்ட கிறிஸ்தவர்கள் மனவிகாரமடைந்து கெட்ட நினைப்புக் கொள்ள இடமேற்பட்டுவிடுமாம். அதற்காக அவளுக்கு மரணத்தீர்ப்பு அளிக்கப்பட்டது! 'அங்குநின்ற வெள்ளைக்குதிரையின் வாலில் அவளைக்கட்டித் தெருக்களின் வழியாகக்குதிரையை ஓடச் செய்யவேண்டும். அவள் கல்லிலும் முள்ளிலும் அடிபட்டு மரணமடைய வேண்டும். அவள்இரத்தம் தெருக்களில் சிந்திப் புனிதப்படுத்த வேண்டும்' என்பது தீர்ப்பு.

அந்தோ! யூதவகுப்பில் பிறந்ததொன்றே அவள் குற்றம்! உயிர்போகும் தருவாயிலும் அப்பெண்மணி தன்மானத்தைமறக்காது ஓர் அருஞ்செயல் புரிந்தாள். அவளுக்கு யாதுவேண்டுமென்று கேட்டதற்கு, அவள்தனக்குச் சிலநீண்ட குண்டூசிகள் வேண்டுமென்று கேட்டனள். அவ்வாறே அவை அளிக்கப்பட்டன. அம்மாதரசிகுண்டூசிகளை ஒவ்வொன்றாகத் தன்காலிலும், கையிலும் உடல்முழுதும் வஸ்திரத்தோடு சேர்த்துக் குத்திக் கொண்டாள். குதிரைக் காலின்கீழ் உருண்டு செல்லும்பொழுது தன்னுடைய வஸ்திரம்விலகி அந்நியர் தன் சரீரத்தைப்பார்த்து விடுவர்என்ற மானத்தினாலேயே அவள் அவ்விதம் செய்துகொண்டாள். குதிரைவாலில் அவள்குழலும் கைகளும் பிணிக்கப்பட்டன. குதிரை புறப்பட்டுத் தெருக்களின் வழியாய் ஓடஆரம்பித்தது. அந்நிலையிலிருந்தசெல்விக்கு நேர்ந்தகதி— சொல்லத் தேவையில்லை.

நமது ஆத்மா அவள் இரத்தம்தோய்ந்த ஊசியை எடுத்துக் கொண்டு ஓடிச்சென்றது. இன்னும் ஒருபரிசே எஞ்சிநின்றது.

(2-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## மூன்றும் பரிசு.

பின்னும் ஆத்மா உலகத்தில் திரிந்து வந்தது. வழக்கம்போல் ஆண்டுகள் பலகழிந்தன. உலகில் மறம் முதிர்ந்து பழுத்து வந்தது. மக்கள் ஒருவரை யொருவர் வஞ்சித்தும், துன்புறுத்தியும், அடிமையாக்கியும், கொன்றும் சுயாலம் பேணிவந்தனர். யுத்தங்கள் பலநேர்ந்தன. பல்லாயிரம் உயிர்களை ஒருகணத்தில் மாய்க்கக்கூடிய இயந்திரங்களும், பீரங்கிகளும், ரத்தக்காற்றும கண்டுபிடிக்கப்பட்டு வந்தன. மக்களிடையே மண்ணாசையும் பொன்னாசையும் மலிந்து வளர்ந்தன. ஆத்மா இவற்றைக்கண்டு நடுங்கி, 'இனி இவ்வுலக மக்களை வானுலகில் விசாரிக்கப்படும்பொழுது நாதரின் புண்ணியதட்டில் வைப்பதற்கு ஒருபொருளுமே இல்லாமற் போய்விடும்' என்று எண்ணமிட்டது, "இவர்கள் இறைவன் அருளைப்பெறாமல் இறப்பதும் பிறப்பதுமாய்த் துன்பக்கடலில் அறியாமல் வீழ்கிறார்களே!" என்று அதுஏக்கமுற்றுத் தவித்தது.

அப்பொழுது ஏதோகொட்டுமுழக்கம் கேட்டது. ஆத்மா கீழிறங்கிப் பார்த்தது. ஒருசிறைச்சாலை. பற்பல யுத்தவீரர் கைகளில் நீண்ட சவுக்குகளை வைத்துக்கொண்டு இரட்டைவரிசையாக நின்றுகொண்டிருந்தனர். வயோதிக யூதன் ஒருவன் அங்கு நிறுத்தப்பட்டிருந்தான். அவன்உடலில் ஒரு கிழிந்தசட்டையும் தலையில் ஒரு குல்லாவும் இருந்தன. அவன்யாது குற்றம் செய்தான்? எதைக்களவாடினான்? யாரைக் கொன்றான்? எல்லாம் கடவுளுக்குத்தான் வெளிச்சம். அவன் நிரபராதி. ஆனால் அவன் மேல் பொய்க்குற்றம்சாட்டப்பட்டிருந்தது'

கிழவன் பட்டாளத்தார் இரண்டுவரிசைகளுக்கும் நடுவே கொண்டு செலுத்தப்பட்டான். அவர்களில் ஒவ்வொருவனும் அவனைத்தத்தம்சவுக்கால் அடிக்கத்தொடங்கினர். 'சடோர்—சடோர்' என்று அடிகள் விழுந்தன. கிழவன் சரீரம் உடைந்து விட்டது! இரத்தம் பெருகியது. அவன் மண்டையோடும் விண்டு கீழே வீழ்ந்தது. அவன் சிறிது தூரம் சென்றபின்தான் தன் குல்லா விழுந்ததை அறிந்தான். உடனே பின்சென்று அதைஎடுத்து உதிரம் பெருகிய தலையில் வைத்துக்கொண்டான். ஏனெனில் அவன்கடவுளை நினைத்துஅப்பொழுது பிரார்த்தனை செய்துகொண்டிருந்தான். பிரார்த்தனை செய்யும்பொழுது குல்லாயிருக்க வேண்டுமென்பது யூதர்விதி. மரணகாலத்திலும் தன் மதத்தின் கட்டளையை நிறைவேற்றினான் அக்கிழவன். சிறிதுநேரத்தில் அவன்கீழே சாய்ந்து விட்டான்... ஆத்மா அவனது இரத்தத்தில் நனைந்த குல்லாவைஎடுத்துக் கொண்டு சென்றது.

மூன்றாவது மெய்ப்பொருளான அக்குல்லாவைச்சுவர்க்கவாசிகள்மகிழ்வுடன் பெற்றுக்கொண்டனர். மிகுந்தமுயற்சிசெய்துஅவர்கள் இவ்வாத்மாவுக்கு நன்றியளித்தார்கள். சுவர்க்கக்கதவு திறக்கப்பட்டது. பரிசுத்த ஆத்மா விரைந்து உள்ளே சென்று நித்திய சூரிகளுடன் அமர்ந்து கொண்டது. உடனே ஒரு அசரீரி கூறியது:—

"இம்மூன்று பொருளே அழகுள்ள மெய்ப்பொருள்கள், இவையால்பிரத்தியக்ஷ உபயோக மில்லாமலிருக்கலாம். ஆனால் இவை ஆச்சர்மான சக்தியுடையவை."

---

## விடுதலைப் போர்.

பண்டைக்காலமுதல் நம் இந்திய நாட்டின்முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாய் நின்று வருவது இந்தியர் ஒற்றுமைக் குறைவேயாகும். இந்தியா அடிமைப்பட்டதும் அதனால்—இன்று விடுதலைப்போரில் சளைத்துநிற்பதும் அதனால். அடிமைத் தளையை அறுத்து, வேற்றுநாடுகளுக்கு மத்தியில் நிகரான சுதந்திரத்தோடு இந்தியா தலைநிமிர்ந்து விற்றிருக்கச் செய்யவேண்டுமென்று பல ஆண்டுகளாக நம்மவர் உழைத்து வருகிறார்கள். எத்தகைய துன்பத்தையும் பொருட்படுத்தாது சிங்கம்போல் விடுதலைப்போரில் முனைந்து நிற்பவர் நம்மிற்பலர். தம் உடல், பொருள், ஆவியனைத்தையும் அற்பணம் செய்துநிற்கும் தியாகமூர்த்திகளிலும் நமக்குக் குறைவில்லை. எதிரிகளிடமிருந்து நமக்கு, ஏளனமும், ஏச்சும், அடக்குமுறையும் தண்டனையும் கிடைத்தன. நாம் இத்தனை படிகளையும் தாண்டி மேலேறிவிட்டோம். ஆனால் கடைசிப்படியான விடுதலை நிலையம் நமக்கு இன்னும் புலனாகவில்லை. இதற்கு முழுமுதற்காரணம் நம் ஒற்றுமைக்குறைவேயாகும்.

தற்போது நமது தேசியத் தலைவர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவுகளையும், சமீபத்தில் டில்லியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முடிவையும், அதன்பின்னர் தலைவர்கள் கூறும் உரைகளையும் கவனித்தால் சமீப எதிர்காலத்தில் நம் கோரிக்கைகள் நிறைவேறுமென்று தெரியவில்லை. வகுப்புப் பூசலும், சாதிச்சண்டையும், மதத்துவேஷமும் ஒருபுறமிருக்க—ஒத்த மனமும் குறிக்கோளுமுடைய தலைவர்கள் தமக்குள்ளேயே பூசலிடுவது அபாயகரமானது. இதனால் நமது நோக்கம் ஈடேறாததோடு நம்மை நாமே பகைவரிடம் காட்டிக்கொடுத்துக்கொள்ளுகிறோம். விடுதலைப்போர் செய்பவர்கள் தமக்குள்ளே போர் செய்துகொள்ளுகிறார்கள். இச்சமயத்தில் நாம் விடுதலைப் போரைநிறுத்திவிட்டு ஒற்றுமைக்காகப் போர்செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பது நம் துர்ப்பாக்கியமாகும்.

பர்க்கன்ஹெட்பிரபு இந்தியர்தமக்குவேண்டிய அரசியல் திட்டமொன்றைத் தயார்செய்ய முடியாது என்று ஏளனம் செய்தார். அதை மறுத்து நம் தலைவர்களால் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. பண்டித மோதிலால் நேரு, டாக்டர் அன்சாரி முதலிய பெருந்தலைவர்களின் நன் முயற்சியால் அத்திட்டம் தோன்றியது. அதைத் தயார்செய்த கமிட்டியின் ஒப்பற்ற தலைவர் நேருதான். அத்திட்டத்தில் இந்தியா அரசியல் சம்பந்தமான பல முக்கிய விஷயங்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இனி ஏற்படுத்தவேண்டிய மத்திய அரசாங்கத்திற்கும், மாகாண அரசாங்கங்களுக்கும் இருக்கவேண்டிய பொருளாதார சம்பந்தம், சுதேச ராஜ்யங்களின் பரிபாலனம் முதலான சிக்கலான பிரச்னைகளுக்கெல்லாம் அதில் பரிகாரம் கூறப்பட்டிருக்கிறது. இத்தகைய சிறந்த திட்டம் தற்போதைய நிலையில் நமக்கு இன்றியமையாததோடு, இது ஒன்றே சாத்தியமானதென்றும் பல தலைவர்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். நேரு கமிட்டி யாதாஸ்த்து வெளிவந்த பின் லக்ஷ்மணபுரியில் கூடிய சர்வகக்ஷிமகாநாடும் மேற்படியாதாஸ்த்தை முழுமனதுடன் ஆதரித்து ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆகவே அத்திட்டம் பெரும்பாலான மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதாயிருக்கிறது.

சமீபத்தில் டில்லியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி இத் திட்டத்தை ஒருவாறு ஒப்புக்கொண்டிருக்கிறது. நேருயாதாஸ்த்தின் குறிக்கோள் குடியேற்ற நாட்டு அந்தஸ்த்தே. தேசத்தில் பல ராஜீய ஸ்தாபனங்களும், அரசியல் வாதிகளும் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றுகூடுவதற்கே இவ்வாறு திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சென்னை காங்கிரஸ் தீர்மானம் இந்தியா பிரிட்டிஷாருடைய சம்பந்தமின்றி பூர்ண சுயேச்சை அடையவேண்டுமென்று. இக்கொள்கையை அநுசரித்து காங்கிரஸ் கமிட்டி பூர்ண சுயேச்சைத் தீர்மானத்திற்குப் பாதகமின்றி, நேரு யாதாஸ்தின் ஒவ்வொரு விபரத்தையும் ஒப்புக்கொள்ளாவிடினும் பொதுவாக அத்திட்டத்தை ஒப்புக்கொள்ளுவதாகத் தீர்மானித்திருக்கிறது.

காங்கிரஸ் கமிட்டி கூட்டப்பட்டதன் முக்கிய காரணம் நேரு யாதாஸ்தைப்பற்றித் தீர்மானிக்கவே. அடுத்த டிசம்பர் மாதம் காங்கிரஸ் கமிட்டி கூடும்பொழுதே இதைப்பற்றி விவாதிக்கலாம். ஆனால் அதற்குமுன்னர் கூட்டப்பட்ட இக்கூட்டத்திலும் நேருதிட்டம் போதிய அளவு ஆதரவுபெறவில்லை. காங்கிரஸ் கமிட்டி தேசத்திற்கு நல்வழி காட்ட எண்ணியிருந்தால் அத்திட்ட முழுவதையும் ஆராய்ந்து ஒப்புக்கொள்ளவேண்டும்; இன்றேல் திட்டமுழுவதையும் தள்ளிவிடவேண்டும். இவ்விஷயத்தில் கமிட்டி குழப்பமான ஓர் தீர்மானம்செய்து தேச நிலைமையைச் சிறிதளவுகூடச் செம்மைப்படுத்த வழியில்லாது செய்திருப்பது வருந்தத்தக்கது. தேசமனைத்தும் 'ஒற்றுமை-ஒற்றுமை' என்று தவிக்கும்பொழுது காங்கிரஸ் கமிட்டி இருந்த ஒற்றுமையையும் எங்கு குலைத்துவிடுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது.

(3-ம்பக்கம் பார்க்க)

## லாகூர் போலீஸ் நாடகம்.

——(0)——

### மகாத்மாஜியின் அபிப்பிராயம்

லாகூரில் போலீஸார் லாலாலஜபதிராய் முதலிய தலைவர்களைத்தாக்கியதைப்பற்றிக் காந்தியடிகள் எழுதியதன் சுருக்கம் வருமாறு:—

பஞ்சாப்பில் தற்போதுள்ள ஜனங்கள் சிறு பிராயத்தினரா யிருக்கும்பொழுதே லஜபதிராய் "பாஞ்சாலசிங்கம்" என்ற பட்டத்தைப்பெற்றுவிட்டார். அவரைப்பற்றி யார் என்ன சொன்னபோதிலும் அவர் பாஞ்சாலநாட்டின் ஒப்பற்ற தலைவராயும் தலைசிறந்த ஒரு இந்தியத்தலைவராயும் விளங்கி வருகிறார். இந்திய தேசிய மகாசபைக்கு அவர் தலைமை வகித்திருக்கிறார். ஐரோப்பாவில் அவருக்கு நல்ல கியாதி. அவர் தாம் நினைப்பதை உடனே மறையாது வெளியிட்டுவிடுவார். இதனால்சிலர் அவர்முன் யோசனையற்றவரென்றுகுடைப்பழிக்கின்றனர்.

### எல்லாம் நன்மைக்கே.

'லாலாஜி தாக்கப்பட்டார்' என்றசெய்தியைப் பார்த்ததும், எதற்காக எப்படித்தாக்கப்பட்டாரென்பதை அறிந்துகொண்டவுடன் நான், "சபாஷ். சுயராஜ்யம் இனி வெகு தொலையில் இல்லை" என்று சொல்லத்துணிந்தேன். புரட்சி இயக்கம் பலாத்காரமாயோ அன்றி அஹிம்சைவழியாலோ நடப்பதெனினும் நாம் சுயேச்சை பெறுவதற்கு முன் தேசத்திற்காக உயிர்துறக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். அஹிம்சைமூலமாயே நாம் அதிகாரத்தையும் சக்தியையும் பெறுதல்கூடும். ஓர் உன்னதமான லட்சியமுள்ள வேலைத்திட்டத்தை நாம் அமைத்துக்கொள்ளுவது எளிது. ஆனால் அதைமுற்றிலும் நிறைவேற்றுவது ஒருக்காலும் முடியாது. ஆதலின் தலைவர்கள் தாக்கப்படுவதும் சுட்டு வீழ்த்தப்படுவதும் நமக்கு மிகுந்த லாபகரமானதேயாகும்.

### பாடம் என்ன?

பஞ்சாப் நிகழ்ச்சி அஹிம்சைக்கும் மிருக பலத்திற்கும் உள்ள சக்திபேதத்தைவெளிக்காட்டுகின்றது. பெருந்திரளான ஜனங்களைப் போலீஸார் எவ்வளவு கோபமூட்டிய போதிலும் அடக்கி அமைதியாயிருக்கச்செய்வதில் லாலாஜிக்கு எவ்விதக்கஷ்டமுமில்லை. இதேவிதமாக கமிஷன் இந்தியாவில் இருக்கும் வரை யாவரும் அஹிம்சையுடனிருந்தால் அரசாங்கம் தன் வேலையில்லையென்பதை உணர்ந்து கொள்ளும்; அன்பு நெறியும் வெற்றியும் தெரியும். லாகூர் கற்பிக்கும் பாடமாவது தேசவூழியர்கள், தாக்கப்பட்டதைக்கண்டு அஞ்சாது கோபத்தை அடக்கிவைத்துக்கொண்டு பின் வேண்டும் காரியங்களுக்கு அதன் சக்தியை உபயோகிக்கவேண்டுமென்பதே. தாக்கப்படுதல் நம் வேலையின் பாகமேயாகும்.

---

## கடிதம்.

கண்யமுள்ள இலங்கை இந்தியன் பத்திராதிபர் அவர்கள் சமுகத்துக்கு,—

அன்புள்ள ஐயா,

கருணையும், நீதியும், வாக்குத்தத்தம் தவறாத நேர்மையுள்ள புண்ணியவான் நாராபெட்டிரோடு கனத்தையிலிருக்கும் ஞா. செ. மு. முகம்மது சுல்தான் அவர்கள் சிலகாலமாக நாகூர் ஆண்டவர்களின் பக்தி வைத்து, வருஷம்தோறும் பாரிசக்தூரி ஒன்று நடத்துவார்களென்பது சகலபுண்ணியவான்களுக்கும் தெரியும். இவ்வருஷம் தலைப்பிறை பிறந்துவிட்டபடியால் 13-உ இரவு நாகை காதிரு ஒலிஅவர்கள் கந்தூரி துவங்கி விட்டபடியால், ஞா. செ. மு. முகம்மது சுல்தான் அவர்கள் தம்முடைய பங்களாவில் வெகு விசேஷமாக அலங்கரித்து ஆலிம் உலமாக்களைத் தருவித்து 13உ இரவு முதல் நடத்திவருகிறார்கள். 10- நாளைக்கும் ஒவ்வொருநாளும் விசேஷமாகவே கந்தூரிகொடுத்துகடைசிநாள்அன்று வெகு பகிரங்கமாக பெருத்தபொருள் செலவு செய்து சுமார் 15000 ஜனங்களுக்குக் குறையாமல் கடிதமூலம் வருவித்து விருந்தளித்து மிகவும் சிறப்பாகவும் பக்தியோடும் செய்வார். அவர்களுக்கு நீண்டஆயுளும் செல்வமும் கொடுக்க வேண்டுமென்றும் ஆண்டவனை வேண்டுகிறேன்.

பேங்குசாலைத்தரு
15-11-28

O. L. S. A. மரைக்கார்.
சேர்மன்

# இலங்கைச் செய்திகள்.

16-உ கூடிய இலங்கைச் சட்டசபையில் மிஸ்டர் வில்லி குடியேற்ற நாடுகளின் காரியதரிசி அனுப்பியிருக்கும் செய்தியில் டோனமோர் யாதாஸ்தில் அவர் அடிப்படையான தத்துவங்கள் என்று எவற்றைக் கருதுகிறாரென்று கேட்டு அறிவிக்கும்படி கவர்னரவர்களை வேண்டிக்கொள்வதாக ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். தீர்மானம் தோற்றுப்போய்விட்டது.

சட்டசபையில் ஸர். பி. ராமநாதன் சிறுபான்மைக் கட்சியார் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதற்குத் தனித் தொகுதித் தேர்தல் நடைபெறவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்.

சென்ற புதன்கிழமை கும்பேனித்தெருவிற்குப் பக்கத்தில் வேலைசெய்த ஒரு வேலைக்காரன் எதிரில் ரயில் வந்ததால் தப்பியோடும்பொழுது சாக்கடையில் விழுந்து மிகுந்த காயமடைந்தான். ஸ்டேஷன்மாஸ்டர் உடனே அவனை சிகிச்சைக்கு அனுப்பியது மெச்சத்தக்கது.

'ஸிலோன் வார்பேஜ் கம்பெனி' கணக்கரான மிஸ்டர் எம். எஸ். செல்லையா பணம் கையாடியதாகக் குற்றம் சாட்டப்பட்டு கம்பெனிக்கு மாதந்தோறும் ரூபாய் 25-வீதம் ரூபாய் 600 கட்டவேண்டுமென்றும், ஜாமீன் கொடுக்கவேண்டுமென்றும் தீர்ப்புப் பெற்றிருக்கிறார்.

கண்டி மகாஜன சபையின் வருடாந்தரக் கூட்டம் சென்ற 16-உ 5 மணிக்குக் கூடி குழப்பத்தில் முடிந்தது. காரியதரிசி கூட்டத்திற்கு வராது மறைந்துபோய்விட்டார்.

கண்டி வாசியான வி. கிருஷ்ணசாமி என்பவர் நாவலப்பிட்டியாவுக்குச் சமீபத்தில் உள்ள ஒரு காட்டில் தற்கொலை செய்துகொண்டு இறந்துபோனாராம். அழுகிப்போன அவர் சரீரம் கண்டுபிடிக்கப்பட்டு சஸ்திர சோதனை நடந்திருக்கிறது.

இம்மாதம் 16-உ மாலை கார்டன் தோட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் யூனியன் ஆதரவில் கூடிய கூட்டத்தில் திரு ஏ. இ. குணசின்ஹா சட்டசபையில் யாவர்க்கும் நிரந்தர வாக்குரிமையின்றி நிபந்தனைகளுடன் ஓட் உரிமை வழங்கவேண்டுமென்று செய்யப்பட்ட தீர்மானத்தைக் கண்டித்துப் பேசினார். அதற்கு ஆதரவாயிருந்த கனம் அங்கத்தினர்களின் பெயரை அவர் குறித்தவுடன் ஜனங்கள் 'கேவலம், கேவலம்' என்று கூவினார்கள். திரு குணசின்ஹா இலங்கையில் சாதிகளும் தாஸர்களும் இல்லையென்றும், பொறுப்பாட்சிக்கு அஸ்திவாரம் நிரந்தர ஓட் உரிமையென்றும் எடுத்துக் காட்டினார்.

பெட்டா பீர் சாஹிப் சந்திலுள்ள மசூதியில் சையது குல்லுல் ரஹ்மான் என்ற மௌலானாவின் பணம் ரூபாய் 1801 சென்ற 14-உ காலையில் களவு போய்விட்டது. மசூதியில் எந்தநேரமும் ஜனங்கள் போய்க்கொண்டிருப்பதால் இந்தக் களவைத் துலக்குவது கடினமாயிருக்கும் என்று தோன்றுகிறது.

கொழும்பு நகர பரிபாலன சங்கத்தார் நவீன முறையில் ஒரு புதுசந்தை கட்டும் வரையில் கச்சேரி ரஸ்தாவிலுள்ள சந்தைக்குப் பக்கத்தில் இன்னும் ஒரு கட்டிடம் அமைக்கப்போகிறார்கள். பிரைஸ் பார்க்கில் காய்கறிகள் வைத்து விற்பதற்கு 300 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட ஓரிடம் அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. முனிசிபல் அங்கத்தினர் பலரும் தலைவரும் தற்போதைய சந்தையைச் சுற்றிப் பார்த்தபின்பே இவ்வாறு தீர்மானித்தனர்.

நரகென்பிடா ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் கள்ளும் சாராயமும் திருட்டுத்தனமாய் விற்கப்படுவதாகவும் குடிக்கப் போகிறவர்கள் ஸ்டேஷன் வழியாய்க் குறுக்குப் பாதையில் போவதாயும் போலீஸார் அறிந்து 8 போலீஸ்காரரும், ஒரு சார்ஜண்டும் இரவு நேரங்களில் அங்கு காத்துவருகிறார்களாம். ஸ்டேஷன் உத்தியோகஸ்தருக்கு அபாயமொன்றுமில்லாமல் தடுக்க இவ்வாறு செய்யப்படுகிறதாம்.

காலஞ்சென்ற ஏ. ஆர். ஏ. ஆர். எஸ். எம். சோமசுந்தரஞ்செட்டியாருடைய தோட்ட அட்மினிஸ்டிரேடர்களென்ற நிலையில் மிஸ்டர் பாஸ்டியன் எமானுவல், மிஸ்டர் ஏ. எஸ். நாயுடு என்பவர்கள் காசி நாராயண செட்டியிடமிருந்து ரூபாய் 128,000 வரவேண்டுமென்று காலி ஜில்லா கோர்ட்டில் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். காலஞ்சென்ற செட்டியாரின் சுமார் 200 ஏகர் விஸ்திரணமுள்ள ரப்பர் தோட்டங்களை அவர் ஏஜண்டான மேற்படி பிரதிவாதி கொடுக்க மறுத்துத் தாமே அனுபவித்து வருவதால் 1923-ம் ௵ ஆகஸ்டு ௴ முதல் பிரதிவாதி பெற்றிருக்கிற லாபமான மேற்கண்ட தொகையைப் பிரதிவாதியைக் கொடுக்கச் செய்வதோடு இந்த வியாச்சிய ஆரம்ப முதல் மாதம் ரூபாய் 3000 செலுத்தச்செய்யவேண்டுமென்று வாதிகள் வேண்டியிருக்கின்றனர்.

வடுக்கொடையில் ஒரே வீட்டில் நால்வர் மரணமடைந்துபோன விஷயமாக யாழ்ப்பாணம் போலீஸ் கோர்ட்டில் விசாரணை நடந்துவருகிறது. சங்கதுரை ஐயர் என்ற ஒரு பிராமணர் அவர் வீட்டில் இறந்து தொங்கிக்கொண்டும், அவர் மனைவியும், இரண்டு குழந்தைகளும் தரையில் கழுத்து வெட்டப்பட்டும் கிடந்ததைப்பற்றி இறந்தவருடைய சகோதரியும் அவள் காதலனும் 15— விசாரிக்கப்பட்டனர்.

கொழும்பு 'ஸ்ராவஸ்டி'யில் சென்ற சனிக்கிழமை கூடி இலங்கைத்தேசிய காங்கிரஸ் நிர்வாக சபைக் கூட்டத்தில் அடுத்த காங்கிரஸ் தலைவராக கனம் மிஸ்டர் ஏ. வி. ஜீ. விஜயசூன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். தலைவர் பதவிக்குக் குறிப்பிடப்பட்ட இருவருள் கனம் டாக்டர் ஸில்வாவுக்கு 28 ஓட்டும், மிஸ்டர் விஜயசூனுக்கு 30ம் கிடைத்தன.

# அமுத மொழிகள்.

அறிஞர் ஸி. வி. ராமன்:— ஒரு சர்வகலாசாலை நல்லதோ தீயதோ என்பதை நிர்ணயிப்பதற்கு அதன் நடைமுறைக்குக் காரணமாயிருக்கும் கொள்கைகளையும், லட்சியங்களையும் கவனிக்கவேண்டும். கியாதி பெற்ற திறமையுள்ள ஆசிரியர்களின்றியும், கல்வி கற்கவேண்டுமென்று பேராவல்கொண்டு தவிக்கும் மாணவர்களைத் தன்னிடம் இழுத்துக்கொள்ளும் சக்தியின்றியும்; சுயேச்சையாக ஆராய்ச்சி செய்வதற்குப் போதிய சௌகரியமின்றியும் நடக்கும் ஒரு சர்வகலாசாலை பெருமையடையமுடியாது.

மேற்படியார்:— சர்வகலாசாலை செய்யும் வேலையின் பயனாவது அது மனிதர் அறிவு வளர்ச்சியோடு பின்னடையாது வளர்ந்துவரவேண்டுமென்பதே.

திரு. என். யக்ஞேஸ்வர சாஸ்திரி:— ஒரு பெண் பிறப்பதற்கு முன் அவளை, 'இந்தியாவில் எங்கு பிறக்க விரும்புகிறாய்?' என்று கேட்டால் 'நான் பிறக்கவே வேண்டாம்' என்று கூறுவள்.

---

யாழ்ப்பாணத்துப் பாதிரியார் திரு. எஸ். ஞானப்பிரகாசர் இதுவரை தாம் செய்துவந்த மொழி நூலாராய்ச்சியில் மிகுந்த வெற்றியடைந்து வருகிறார். அவர் செந்தமிழில் செய்துவந்த ஆராய்ச்சியின் பயனாகத் தமிழ் மொழி மிகப் பழமையான காலத்தில் வழங்கிவந்த மூலமான மொழியென்று அதன் வார்த்தைகள் பலவற்றிலிருந்து தெரிவாகின்றன. பாதிரியாரின் நோக்கம் தம் ஆராய்ச்சி முடிவை ஒரு தனி அகராதியாக வெளியிடவேண்டுமென்பது. அவ்வகராதி தமிழர்க்குமட்டுமன்றிப் பிறமொழியாளர்க்கும் பயன்படுமாம். அரசாங்கத்தார் சிங்கள அகராதியொன்று தொகுப்பதற்கு வேண்டிய உதவி செய்துவருகின்றனர். அது முடியப் பத்து வருடமாகும். சிங்கள பாஷை சொற்களில் நூற்றுக்கு 30-தமிழாயிருப்பதாலும், எஞ்சிய சொற்கள் சமஸ்கிருதம் பாலியாகிய பாஷைகளைச்சார்ந்தவையாயிருப்பதாலும் முதலில் ஞானப்பிரகாசருடைய அகராதி வெளிவருவதே நலமென்றும் சொல்லப்படுகிறது.

——(0)——


## தாய்மார்களே!

நீங்கள் பரிபாலித்துவரும் இளங்குழந்தைகளின் ஆரோக்கியத்தையும் பலத்தையும் சோதனை செய்து பாராதீர்கள்.

எக்காரணம் பற்றியாவது உங்கள் குழந்தைகளுக்கு பிறப்புரிமையாகிய இயற்கைபால் ஆகாரத்தை கொடுக்கமுடியாத நிலைமையிலிருப்பீர்களானால், அதே நிலைமையிலுள்ள ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு ஆரோக்கியத்தையுண்டுபண்ணுவதில் மிகச் சிறந்ததென நிரூபிக்கப்பட்டுள்ள **லக்டோஜன்** என்ற பாலாகாரத்தையே வாங்கிக் கொடுங்கள்.

**லக்டோஜன்** என்ற பாலாகாரம் உலகத்திலுள்ள பல பிரபல டாக்டர்களாலும் தாதிகளாலும் படுக்கையிலிருக்கும் நோயாளர்களாலும் உபயோகப்படுத்தப்பட்டு மிகவும் மேன்மையானதென்று புகழ்ந்து பாராட்டப்படுகின்றது. ஆகையால் அவர்களுடைய உபதேசத்தையும் அனுபவப் பழக்கத்தையும் பின்பற்றி அவர்கள் அடைந்த பயனை நீங்களும் அடையும்படி உங்கள்குழந்தைகளுக்கு **லக்டோஜனையே** கொடுங்கள்.

அதும்வ குழந்தைகளுக்கும், பல மற்றவர்களுக்கும் இயற்கையானபாலாகாரம்.

சோதனை பார்ப்பதற்கான இலவச ஸேம்பிள்களும் இச்சிறந்த பாலாகாரத்தைப்பற்றிய முழுவிவரங்களும் தேவைப்படுவோர் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.




நெஸல்ஸ்,
NESTLES (C. I)
தபால்பெட்டி நம்பர் 189,
கொழும்பு.


(கடைசிப் பேர்.)

கமிட்டித் தீர்மானத்தால் ஏற்படும் குழப்பம் அதிகமாயிருக்கிறது. எவ்வாறெனில் (1) நேரு யாதாஸ்து குடியேற்றநாட்டு அந்தஸ்துப் போதுமென்று கூறுகிறது; (2) அகில இந்தியகாங்கிரஸ்பூரணசுயேச்சையைத்தன் லட்சியமாய்க் கொண்டிருக்கிறது; (3) லட்சுமணபுரிசர்வகக்ஷிமகாநாடுகள் 14-ம தீர்மானத்தால் நேருதிட்டத்தைப்— பாகம் பாகமாய்ப் பிரிக்காது — முழுவதையும் ஒப்புக் கொண்டிருக்கிறது. சர்வகட்சி மகாநாட்டில் கூடியிருந்த பலவேறு தலைவர்கள் தங்கள் தங்களுக்கு இஷ்டமானபடி நேருதிட்டத்தின் உட்பிரிவுகளையும், முக்கிய பாகங்களையும் திருத்தியிருந்தால் நேருயாதாஸ்தின் கதி எப்படிப் போயிருக்கும்? எவ்வளவு குழப்பம் ஏற்பட்டிருக்கும்? பிறர் இதுவே சமயமென்று நம் ஒற்றுமைக்குறைவைக் கண்டுவளனம்செய்திருப்பர். நல்வேளையாக அம்மகாநாடு திட்டத்தை ஒப்புக்கொண்டது. ஆனால் காங்கிரஸ் கமிட்டிமட்டும் அவ்வாறு செய்ய மறுத்துநிற்கிறது. ஏனெனில் பின்னர் தனிப்பாகங்களாகப் பிரித்து ஆலோசனைசெய்யப் போகிறதாம்!

சுயராஜ்யத்திட்டம் தயார்செய்வதைப்பற்றி வெகுகாலமாகப் பாபு பகவன்தாஸ் போன்ற தலைவர்கள் முயற்சிசெய்து கடைசியாகத் தயாரிக்கப்பட்ட பின்பு காங்கிரஸை அதை உல்லங்கனம்செய்து அரைமனதுடன் ஒப்புக்கொண்டதில் சிறப்பொன்றுமில்லை. இன்று லாலா லஜபதிராய், டாக்டர். பெஸன்ட், மோதிலால் நேரு, டாக்டர். அன்ஸாரி போன்ற பெரியார்கள் குடியேற்ற நாட்டுரிமைவேண்டிப் பிரசாரம் செய்வது ஒருபுறமும், திரு. ஸ்ரீனிவாசய்யங்கார், பண்டித ஜவஹர்லால் நேரு முதலியோர் பூர்ணசுயேச்சையை விரும்பிப் பிரசாரம் செய்வது மற்றொருபுறமுமாகத் தேசத்தில் குழப்பமே அதிகரிக்கிறது. பண்டித நேரு தமது பிரசங்கத்தில், "எனக்கும் பூர்ணசுயேச்சையே வேண்டுமென்று கொள்கை. ஆனால் இப்பொழுதுள்ள அடிமைத்தனத்திற்குக் குடியேற்றநாட்டு அந்தஸ்து மேம்பட்டது எனபதால் நான் தற்சமயம் பூர்ணசுயேச்சையை வற்புறுத்தவில்லை. குடியேற்ற நாட்டுஉரிமையும் நமக்கு எளிதில் கிடைத்துவிடப் போவதில்லை; வற்புறுத்தியே பெறவேண்டும். மேலும் இத்திட்டத்தையே ஒப்புக்கொண்ட சர்வகட்சி மகாநாடு செய்திருக்கும் நல்வேலையை நாம் அதிகரிக்கச் செய்யவேண்டும்" என்று பொருள்படப் பேசியுள்ளார். பூர்ணசுயேச்சை கேட்பவர்களைப்பற்றி நாம்கண்டிக்கவில்லை. ஆனால் நேருயாதாஸ்து நிறைவேறுவதற்கு வேண்டிய பக்கபலமாகப் பொதுஜனங்களின் அன்பையும் ஆதரவையும் பெறவேண்டியசமயத்தில் பிளவுகளை விசாலப்படுத்துவது தவறென்றே கூற விரும்புகிறோம். நேருவின் வார்த்தைகளிலிருந்து சர்வகட்சிகளையும் சமரசப்படுத்த வேண்டுமென்பதில் அவர்கொண்டுள்ள பேரவா தெரிகின்றது.

இனி டிஸம்பரில் கல்கத்தா காங்கிரஸில் எவ்விதமாகத் தீர்மானிக்கப்படுகிறது. என்பதிலிருந்து தான் தேசம் முன்னேறவோ பின் செல்வதை நிறுத்தவோவழியேற்படும். இனியாவது தேசபக்தர்களும் தலைவர்களும காலமறிந்து, இடமறிந்து, பொறுப்புடன் ஒற்றுமையாய் நின்று உழைத்து நல்வழி காட்டுவார்களாக.

"சுயராஜ்ய கட்டடத்தை எமது வாழ்நாளிலேயே கட்ட முடியாவிடினும அதன் அஸ்திவாரத்தில் எங்கள் எலும்புகளைப்போட்டாவது ஆரம்பித்து எங்கள் சந்ததியாராவது கட்டிமுடிக்க வழி செய்வோம்"—

பண்டித, மோதிலால் நேரு

---

## முக்கிய அறிவிப்பு.

இதுவரை ஐந்து சதமாக விற்றுவந்த நமது 'இலங்கை இந்தியன்' இம்மாதம் 21-உ முதல் ஆறுசதமாக விற்கப்படும். பத்திரிகை வழக்கம்போல் சில்லரை விற்பனைக்குரிய இடங்களில் கிடைக்கும்.

காரியஸ்தர்.

'இலங்கை இந்தியன்.

**பாஞ்சால வீரசிங்கமான லாலா லஜபதிராய் சென்ற 17-உ சனிக்கிழமை காலை ஹிருதயத்துடிப்பு நின்றுபோனதால் தேகவியோகமானர். இந்தியா முழுதும் துக்கம் கொண்டாடுகிறது.**

**இலங்கை இந்தியன்.**
1928-ஷு நவம்பர் மீ 21 உ

## பெரிய ஏமாற்றம்.

சென்ற வியாழக் கிழமையன்று சட்டசபையில் பிரஜைகள் யாவர்க்கும் நிரந்தரவாக்குரிமை கூடாதென்று தீர்மானம் நிறைவேறியதும், கனம் அங்கத்தினர் சிலர் தங்கள் வெற்றியைக் குறித்துக் களிப்படைந்திருப்பர். ஆனல் அக்களிப்பிற்குச் சீக்கிரத்திலேயே எதிர்பாராத முடிவு சேர்ந்துவிட்டது. குடியேற்ற நாடுகளின் காரியதரிசியான கலனெல். ஆமெரி கமிஷனரின் யாதாஸ்த்தை ஒப்புக் கொள்ள வேண்டும், இன்றேல் தள்ளிவிட வேண்டுமென்று அனுப்பியசெய்தி சபையில் படிக்கப்பட்டது. இதனல் கனம் அங்கத்தினர்களுக்கும் வெளிஜனங்களுக்கும் அறிவு விளக்கம் ஏற்பட்டிருக்குமென்று நினைக்கிறோம். நிரந்தர வாக்குரிமை கமிஷன் திட்டத்தில் முக்கியமான பாகமாகும். அது நிராகரிக்கப்பட்டது. இதுபோன்ற கமிஷன் யாதாஸ்த்தின் மூலாதாரமான தத்துவக்களைப் பாதிக்கக்கூடிய விதமாய்ச் சட்டசபையில் நிகழ்ந்த தர்க்கங்களும், சொற்பொழிவுகளும் தற்போது அதிகாரம்வகித்திருப்பவர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை என்னும் விஷயம் அச்செய்தியின் நோக்கமாயிருக்கிறது. சில கௌன்ஸிலர்களுடைய ராஜதந்திரக்குறைவுக்கும் அரசியல் சிறுமைக்குணத்திற்கும் இனி இடமில்லையென்றும் அச்செய்தி குறிக்கின்றது. டோனுமூர் பிரபுவையும் அவர்சகாக்களையும் வாயாரப்புகழ்ந்து கொண்டாடியசிலர் பரிகாசத்திற்கிடமான முழு விஷயத்தையும் இப்பொழுது ஒருகணப்பொழுதேனும் அறிந்திருப்பர். ஆனல் காலதாமதமாகி விட்டது. தேசத்திற்காக உழைப்பதாய்ச் சொல்லிக் கொண்டவர்கள் முதலிலேயே கமிஷன் நியமனத்திற்குக் காரணமான உட்கருத்தை ஆட்சேபித்திருந்தால் அவர்கள் தீர்க்கதரிசனம் பெற்றவர்கள் என்னலாம். கமிஷன் விசாரிக்கவேண்டி அனுப்பப்பட்ட விஷயங்கள் மிகமிகச் சுருக்கமானவை. அதாவது தற்போதுள்ள அரசியல் அமைப்பின் நடைமுறையையும், குற்றங்குறைகளையும் விசாரிக்கவேண்டுமென்பதே. புதிய சீர்திருத்தம் இடையில் ஒரு பிரிவாக ஏற்படவேயில்லை. நமது பிரதிநிதிகள் உன்னதமான விசாரணைக்கு வந்த கமிஷன் முன்பு சாதாரணமான சாட்சிகளைப்போல் நின்றுதங்களுக்குள்ளேயே ஒருவர்சொன்னதை மற்றவர் கண்டித்துச் சாட்சியம் கொடுத்தது இரண்டாவது தவறாகும். சமூகத் துவேஷம் கொண்டவர்களும், ஆடம்பரத்தையும் அதிகாரத்தையும் பெற்றவுடன் எளிதில் மனவேற்றுமை அடைகிறவர்களும், தேசஊழியமென்பது திறம்பட அழகாகப் பேசுவதொன்றுதான் என்று எண்ணியிருப்பவர்களுமான ராஜதந்திரிகள் கையில் அரசாங்கத்தின் சர்வாதிகாரத்தையும் பிரிட்டிஷார் ஒப்புவித்திடுவரென்று நம்பியது மூன்றாவது பிழையாகும்.

சட்டசபை முடிவில் ஒருவிஷயம் தெளிவாயிருக்கிறது. உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்களிற் பெரும்பாலார் நிரந்தர வாக்குரிமைக்கு விரோதமாகஓட்டுக்கொடுத்திருக்கின்றனர். எந்தவிஷயம்கமிஷனுல்மூலாதாரமாகக் கருதப்பட்டதோ அதே விஷயம் சட்டசபையால் எளிதில் புறக்கணிக்கப்பட்டது.

இத்தகைய பெரும் மாற்றத்திற்குக்காரணமாயிருந்தது சபையிலுள்ள தோட்டக்கார ராஜதந்திரிகள் இந்தியத் தொழிலாளிக்கு வாக்குரிமையில்லாது பிடுங்கிவிடவேண்டுமென்று கொண்டிருந்த ஆத்திரமென்பதும் தெளிவாயிருக்கிறது. இலங்கையிலுள்ள இந்தியர்கள், கமிஷன் இலங்கையில் ஸ்திரமாயும் நிலையின்றியும் வசித்துவரும் இந்தியருள்பட யாவர்க்கும் நிரந்தர வாக்குரிமையளிக்கவேண்டுமென்று செய்திருந்த சிபார்சைக்கருதியே இந்தியர்க்குப் பிரத்தியேகமான தனிப் பிரதிநிதித்துவம் வேண்டாமென்று கூறியதை இந்தியர் ஒன்றுகூடி உழைத்து அதிகாரிகளுக்குத் தெளிவாய் எடுத்துக்காட்டி உணர்த்தவேண்டும். இது இந்தியர் தற்போது செய்யவேண்டிய கடமை. ஒருதனிச்சமூகத்திற்கு விரோதமாய் எத்தகைய வேற்றுமையும் உண்டாக்குவதிலுள்ள அபாயத்தை இங்குள்ள அரசாங்கத்திற்கும் இங்கிலாந்திலுள்ள துரைத்தனத்தாருக்கும் அறிவுறுத்தி எச்சரிக்கை செய்யவேண்டுவது இலங்கை இந்தியரின் கடமையாயிருக்கிறது. ஏனெனில் முதலில் கமிஷனர்கள்தான், இலங்கையில் ஐந்துவருஷம் வசித்துவரும் இந்தியர்க்கு ஓட்டுரிமையுண்டு என்று ஒரு விஷமத்தன்மான நிபந்தனையை ஏற்படுத்தினர்கள். இதைப்பற்றி நாம் முன்னரே வேண்டிய அளவு எழுதியிருக்கிறோம். கமிஷனர்கள் காட்டிய இக்குறிப்பைக் கவுன்ஸிலிலுள்ள தோட்டக்கார ராஜதந்திரிகளான அங்கத்தினர்கள் அதுவே தக்கசமயமென்று பிடித்துக்கொண்டனர். தங்கள் நன்மைக்குப் பங்கம் நேர்ந்தபோதிலும் அதைப் பொருட்படுத்தாது அவர்கள், ஆங்கிலம், சிங்களம் அல்லது தமிழாகிய மூன்று பாஷைகளில் ஒன்று தெரிந்தவர்களுக்கே ஓட்டுரிமையளிக்கவேண்டுமென்ற திருத்தத்தை நிறைவேற்றியிருக்கின்றனர். வாதத்திற்கு மருந்துண்டு; பிடிவாதத்திற்கு மருந்தேது?

## கற்றறிந்த வாக்காளர்.

——0——

கனம்திரு. தம்பிமுத்து சட்டசபையில், ஓட்டருக்குத் தமிழ், சிங்களம், ஆங்கிலம் அல்லது தனது தாய்ப்பாஷையாவது தெரிந்திருக்கவேண்டுமென்று ஒருதிருத்தப்பிரேரேபனை கொண்டுவந்தார். இந்தியத் தொழிலாளர்க்குஉரிமைமறுக்க எண்ணியிருந்த அங்கத்தினர்களுக்கு இந்நிபந்தனை திருப்தி யளித்திருக்கக்கூடும். வரிசெலுத்தும் பொதுஜனங்களில் வாக்குரிமைக்கு எவ்வித நிபந்தனையும் இருத்தல் கூடாது, அவர்கள் வாக்குரிமையின் மூலம் அரசியலில் கலந்துகொள்ளவேண்டும் என்பது எமது நோக்கமாயினும் இத்திருத்தப் பிரேரேபனை அந்நோக்கத்திற்குசிறிது ஒட்டிவருவதால் இதை நாம் ஒப்புக்கொள்ளக்கூடும். இதனல் அனேகம் இந்தியத் தொழிலாளருக்கு வாக்குரிமையில்லாது போய்விடும். ஆயினும் பட்டணங்களிலுள்ள இந்தியத் தொழிலாளர்க்கு இதனல் பெருந்தீங்கு விளைந்துவிடாது; அவர்கள் தங்கள் தாய்ப் பாஷையாவது தெரிந்திருப்பார்கள். நிரந்தரவாக்குரிமைக்கு இதை முதற்படியாகக் கருதலாம். ஆனல் சென்ற வியாழனன்று மாலையில் கூடிய சட்டசபையில் மிஸ்டர் தம்பிமுத்து, தமது திருத்தப் பிரேரேபனையில் 'தனது தாய்பாஷையாவதுதெரிந்திருக்கவேண்டும்' என்பதை எடுத்துவிடும்படி கூறினர். மிஸ்டர் தம்பிமுத்து திடீரென்று இவ்வாறுசெய்யத் துணிந்ததின் பயனையும் கருத்தையும் சபையிலிருந்த இரண்டுஇந்திய அங்கத்தினரும் உணர்ந்து சொல்லாதது மிகமிகப் பரிதாபத்திற்கிடமாயிருக்கிறது. முதல் இந்திய அங்கத்தினரின் ஆட்சேபனையால் தபிச்செய்யப்பட்டது. அதற்குள் திருத்தம் இரண்டு அதிக ஓட்டுகளால் சபையில் நிறைவேற்றப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் உத்தியோகப் பற்றற்றமூன்று ஐரோப்பிய அங்கத்தினர்கள் விவாத ஆரம்பத்தில் நிரந்த வாக்குரிமையைப் பற்றி அளவுகடந்து புகழ்ந்துவிட்டுப் பின்னுல் கல்வி நிபந்தனைக்குச் சாதகமாக ஓட் செய்திருப்பதை கவனிக்கவேண்டியது அவசியமாகும். கமிஷனர்கள் இவ் விஷயமாகத் தீர்க்காலோசனையும் ஆராய்ச்சியும் செய்து, 'கல்வி நிபந்தனையில் அதிக நம்பிக்கை வைப்பதற்கிடமில்லை' என முடிவு கூறியிருக்கின்றனர். ஆகவே அந்நிபந்தனையால் விசேஷநன்மையில்லையென்று தெரிகிறது. கமிஷன் கல்வி நிபந்தனையே பயனில்லையென்று சொல்லியிருக்கும் பொழுது, ஓட்டருக்குத் தெரியவேண்டிய பாஷை ஆங்கிலமா, தமிழா, சிங்களமா என்பதைப்பற்றி அவர்களுக்குப் பரிசீலனைசெய்ய அவசியமில்லை. ஆகவே, பெரும்பான்மையான கவுன்ஸிலர்களால் நிறைவேற்றப்பட்ட இந்நிபந்தனையால் பாதிக்கப்படும் இந்தியஜாதியார்கள் தங்கள் பாஷைகளின். அவசியத்தைக் காட்டி இலங்கை அரசாங்கத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்வதற்கு விரைவில தீவிர முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம்.

## இந்தியாவின் பேரிடர்

பாஞ்சாலவீரசிங்கமான லாலாலஜபதிராய் சென்ற சனிக்கிழமை காலை திடீரென மரணமடைந்த செய்தியைக் கேட்டு இந்தியர் அனைவரும் திடுக்கிட்டுப்போயினர். தேசத்தின் தற்போதைய நெருக்கடியான நிலையில் லாலாஜியின் மரணம் இடிவிழுந்தது போலிருக்கிறது. லாலாஜி அறுபத்திமூன்று வயதாகியும் சிறிதும் தளராது, நமது விடுதலைப்போரின் முன்னணியில் நின்று போராடிவந்து, சிறிதளவுகூட ஓய்வெடுத்துக் கொள்ளாமல் யுத்தகளத்திலேயே தேசமாதாவின் பலிபீடத்தில் தமது ஆருயிரையும் சமர்ப்பணம் செய்துவிட்டார். வாழ்விலும் வீரராய், சாவிலும் வீரராய் பாரதத் தாயின் மானத்தைக் காப்பாற்றச் சமர்களத்தில் வீழ்ந்த நமது லஜபதி வைர உள்ளம் பெற்றிருந்தாரேயன்றி வைரசரீரம் பெற்றிலலை. வெளிநாடுற்றும், சிறையில் புழுங்கியும், இரவு பகல் ஓய்வின்றி தாய்த் திருநாட்டிற்குச் சேவை செய்தும் நலிந்துபோன அவர் திருமேனி, லாகூர் போலீஸ் வீரரின் தடிகளால் தாக்கப்பட்ட நாள்முதல் நாளொரு மேனியும் பொழுதொரு மாற்றமுமாய்த் தளர்ந்துகொண்டே வந்து, அடிபட்டவலியால் துன்பப்பட்டுத் திடீரெனத் தளர்ந்துவிட்டது. பிடித்த வில்லும் கையுமாய், லஜபதி எய்திய தெய்வீக வீரமரணம் போல் யாருக்குத்தான் கிடைக்கும்? இந்தியர் இனி பெற்றெடுக்கும்பிள்ளைகளுக்கெல்லாம் 'லஜபதி' 'லஜபதி' என்ற வீரத் திருநாமம் சூட்டி, பண்டை மகரிஷிகள் போன்ற ஞானியாயும், இதிகாச வீரர்கள்போன்ற தீரராயும் விளங்கிய லாலாஜியின் புகழைக் காப்பாராக.

இந்தியாவின் சுதந்திரப் போர் தொடங்கியகாலையில் முன்னணியில் நின்றவர் லாலாஜியே. விடுதலைக்காக உயிர்துறந்த கடைசி வீரரும் அவரே. நாற்பது வருஷகாலமாக நமது விடுதலையொன்றையே அவர் கருதி உழைத்துவந்தார். அதிகார வர்க்கத்தின் அறிவற்ற கொடுமை, சாதிப் பூசல்கள், சமயச்சண்டைகள், தேசமக்களின் வெறுப்பு ஒன்றையும் பொருட்படுத்தாது ஊழியம் புரிவதொன்றையே தம் கடமையாய்க் கொண்டு லஜபதி ஒழுகிவந்தார். திலகர் பெருமானும், லஜபதியும் இந்தியாவின் இரு கண்மணிகளாய் ஒன்றுகூடி உழைத்துவந்தனர். முதலில் திலகரும் இப்பொழுது லஜபதியும் பொய்யுடம்பு நீத்துச்சென்றுவிட்டதில் பாரதத் தேவிக்கு நேர்ந்துள்ள நஷ்டம் அளவிடற்பாலதன்று. மராத்திய திலகர், வங்காள பாபு (சு. பனர்ஜி), பஞ்சாபி லாலா என்ற திருநாமங்கள் இந்தியர் செவிக்கு அமுதமாயும், பகைவருக்கு நெய்யாதமாயுமிருந்தன. பாஞ்சாலச் சிம்மம் இன்று மிருக பலத்தையே நம்பியுள்ள வேடரால் வேடிக்கையாகத் தாக்கப்பட்டு, தனது கர்ச்சனையடக்கி வீழ்ந்துவிட்டமா பெருஞ் சரித்திரத்தை இந்தியர்—இனி வரப்போகும்சந்ததியார்களும் என்றும்மறக்கமுடியாது. லஜபதி ஆசார சீர்திருத்தம் முதலிய பலவிஷயங்களில் உழைத்துவந்தபோதிலும் எல்லாவற்றிற்கும் மேலாக ராஜீயத்திலேதான் அவர் மிகவும் பாடுபட்டிருக்கிறார். ஏனெனில் இந்தியா அரசியல் விடுதலை பெற்றாலன்றி எந்தத் துறையிலும் எவ்விதமும் முன்னேறமுடியாதென்பதை அவர் உணர்ந்திருந்தார். ராஜீயத்தில் அவர் என்றும் மாறாத ஒரே கொள்கையுடன் ஒழுகவில்லை. காலத்திற்கேற்ப, நிலைமைக்கேற்ப, இளவயதுள்ள ஓர் வீரனுடைய உற்சாகத்தோடு அவர் தம் கொள்கைகளை மாற்றிக்கொண்டு உழைத்துவந்தார். பழைய காங்கிரசுடன் சேர்ந்து அவர் அரசாங்கத்தாரிடம் தயவால் நன்மைபெறவேண்டுமென்றுழைத்தார். பின்னர் மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தைக் கொணர்ந்தவுடன் சர்வத்தையும் தியாகம்செய்து அதிலும் கலந்துகொண்டு முதன்மையாக நின்றார். தேசபந்து தாஸர் 'யமதனை அதன் குகையில் சென்று எதிர்க்கவேண்டும்' என்று சட்டசபை இயக்கத்தை ஆரம்பித்தவுடன் லஜபதி அதிலும் சேர்ந்து இந்தியா சட்டசபை அங்கத்தினராளுர். இப்பொழுதும் ஸைமன் கமிஷன் பகிஷ்கார இயக்கத்திற்கு அவர் ஒரு அரணாக நின்றார். சர்வகட்சி மகாநாட்டிற்கும், நேரு கமிட்டி யாதாஸ்த்தைப்பரப்புவதற்கும்அவர் செய்துவந்தஊழியம் அளவிடப்பாலதன்று. நமது தலைவர்கள் பூர்ண சுயேச்சை வேண்டுமென்றும், குடியேற்றநாட்டந்தஸ்து வேண்டுமென்றும் செய்துவருர் வீண் சண்டையைச் சமாதானப்படுத்துவதற்கு லஜபதி தமது கடைசிநாட்களைச் செலவழித்தார் என்பதிலிருந்து தேச ஒற்றுமையில் அவர் கொண்டிருந்த ஆவலும் ஆத்திரமும் தெரிகின்றது. லஜபதிஇன்றமட்டுமல்ல—முன்னுள்முதலே தேசியப் போர்வீரருள் கட்சி பேதமும், ஒற்றுமைக் குறைவும் ஏற்படாதவாறு பெருமுயற்சி செய்து தடுத்துவந்திருக்கிறார். தம்முயற்சியில் தமக்குக் கிடைக்கும் பெருமை, புகழ் முதலியவற்றைத் தியாகம் செய்திருக்கிறார். அடிமைப்பட்ட இந்தியர்களுக்கு ஒற்றுமை ஒன்றே விடுதலைக்கு வழியென்பதை அவர் வாழ்வுமுழுதும் நிதர்சனமாகக் காட்டுகின்றது. ராஜீயம் அவரது சதுரங்கமேடையாயிருந்தது. எதைப் பணயம்வைத்தாவது விடுதலைபெறவேண்டுமென்றிருந்த அவர் ஒற்றுமையை மட்டும் பணயம் வைக்க மறந்துவிட்டார். ஏனெனில் ஒற்றுமையில்லாவிட்டால் நாம் பெற்ற இன்பத்தை அநுபவிப்பது எங்ஙனம்?

லஜபதியின் மரணத்தில் தேசம தன் அரும்பெரும் புதல்வனை இழந்துவிட்டது, ஹிந்துமகாசபை தன் ஒப்பற்ற தலைவரைத் துறந்துவிட்டது, தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள் துன்பக் கடலிலிருந்து தங்களை உய்விக்கவந்த ஒரு தெப்பத்தை இழந்துவிட்டது. இனி, தேசநதா லாலாஜி வளர்த்த ஒற்றுமைப் பயிரை அழியாது காக்கவேண்டுவது கடமை. இந்தியாவில் தீண்டாதாரென்றும், தாழ்ந்தவரென்றும் ஒதுக்கப்பட்டுள்ள 8-கோடி மக்களை உயர்நிலை அடையச்செய்து தீண்டாமையென்னும் பாவத்தை நீக்குவதும், சாதிக்கொடுமையை ஒழிப்பதும், ஒற்றுமையுடன் விடுதலைப்போருக்குழைப்பதும லாலாஜி நம்மிடம் எதிர்பார்த்திருந்த வேலைகள். அவற்றை நாம் செம்மையாய்ச் செய்துமுடிப்போமாக. தேசதிய வாலிபர்கள் வீர மரணமெய்திய லஜபதியின் தியாகத்தையும் புனித வாழ்வையும குறிக்கோளாய்க் கொண்டு, அவரால் எழுதப்பட்டுள்ள அமிர்தம்போன்ற நூல்களைக் கற்றுணர்ந்து அவர் வாழ்ந்துகாட்டிய பாதையிற் சென்று உய்வார்களாக. அதுவே லஜபதிக்கு நாம் செய்யும் கைம்மாறாகும். கல்லிலும் செம்பிலும் செய்துவைக்கும் ஞாபகச் சின்னங்கள் பயனற்றவை, அழிவுள்ளவை. அவர் மனதில் பேராவலுடன் போற்றிவந்த சுதந்திரக் கனவை விரைவில் கிரியாம்சையில் இந்தியா பெறவேண்டுவதற்கு உழைப்பதே சுவர்க்கத்திலுள்ள அவர் புனித ஆத்மாவுக்கு சாந்தியளிப்பதாகும்.

# வாக்குரிமையைப்பற்றி சட்டசபையில் முடிவு.

## இலங்கையரல்லாதார்க்குச் சமஉரிமையில்லை.

[சென்ற 15உ கூடிய சட்டசபையில் வாக்குரிமை விவாதம் முடிவடைந்தது. நிறைவேறிய தீர்மானங்கள்—திருத்தங்களுடைய சுருக்கமாவது இலங்கையருக்கு நிரந்தரவாக்குரிமை அளிக்கப்படவில்லை, 21-வயதுக்கு மேற்பட்ட பெண்டிருக்கு 'ஓட்' உரிமையுண்டு, இலங்கையரல்லாதாருக்கு சரிசமமான அந்தஸ்தில்லை.]

### நிரந்தரஉரிமை கூடாது

முதலில் மிஸ்டர் வில்விதன் முன்பிரசங்கத்தைத் தொடர்ந்து பின்வருமாறு பேசினார். "இங்கிலாந்தில் தொழிலாளருக்கெல்லாம் வாக்குரிமை அளிக்கப்பட்டிருப்பது, அவர்கள் உரிமை வழங்குவதன்மூலமாய்த் தங்களையும் உயர்த்திக் கொள்வதற்கே. உரிமை வழங்குவதில் அவர்கள் தன்னலத்தைமறந்து சமூகத்தின் நன்மையைக் கவனிப்பதற்காகவே அவ்வாறு செய்யப்படுகிறது. ஆனால் இலங்கையில் யாவரும் நிரந்தர உரிமை வழங்கவேண்டுமென்று கமிஷனர்கள் சிபார்சு செய்திருப்பது மேற்சொன்னமுறையிலில்லாமல் தொழிலாளர் தங்கள்சொந்த உரிமைகளைப் பெறுவதற்காக உபயோகித்துக் கொள்ளும் ஆயுதமாகவே 'ஓட்' வழங்கவேண்டுமென்பது. இதனால் சமூகத்திற்குள்ளே விரோதமும் துவேஷபுத்தியுமே வளர்ந்துவரும். பெரியசீர்திருத்தம் செய்வதற்கு இதுமுறையல்ல. இங்கிலாந்தில் பதவிவேட்டையாடுபவர்கள் பாமரர்களைஏமாற்றி வாக்கைப் பெற்றுவிடாமலிருப்பதற்காக 'சம்மதச் சீட்டுச்சட்டம்' ஒன்று செய்யப்பட்டிருக்கிறது. நான் அதுபோல் இந்நாட்டில் நிரந்தர உரிமை வேண்டாமென்று சொல்வது இலங்கையரை இழிவுசெய்ப அன்று. ஆனால் மனித இயற்கைஎங்கும் ஒரேபடித்தாய்க் குற்றம் குறையுள்ளது எனபதையே கூறுகிறேன். நிரந்தர வாக்குரிமை வழங்கினால் தம்மன், திம்மன்என்று நிமிஷத்திற்கொருகட்சிமாறும் பலர் சட்டசபைக்குவந்து கூடிவிடுவர். ஆகலால் அதிகமானவருக்கு உரிமை வழங்கவேண்டுமென்றால் தீர்மானத்தில் 50 ரூபாய் வருமானமிருக்கவேண்டுமென்ற நிபந்தனையை 30 ரூபாய்க்குக் குறைக்கலாம்."

### சமாதானத்திற்குக் குறுக்குவழி.

இந்தியர் வாக்குரிமையைப்பற்றிஅவர், "இலங்கையருக்கே நிரந்தரவாக்குரிமை அளிக்காவிடில் இந்தியர்க்கும் அது அளிக்கப்படமாட்டாது. இலங்கையர் வகுப்புவேற்றுமை பார்க்கிறார்கள் என்றுவசை சொல்லவும் இடமிராது. அந்நியரும் இலங்கையின் செழிப்பிற்கு அவசியமாயிருக்கிறார்கள்" என்றுகூறிமுடித்தார்.

### மிஸ்டர். மொல்லமூறேயின் சமாதான உரை

பின் மிஸ்டர்— மொல்லமூறே தன் தீர்மானத்தைப் பற்றிஎழுந்த ஆட்சேபங்களுக்குச் சமாதானங் கூறி ஒரு பிரசங்கம் செய்தார். அங்கத்தினர்கள் தத்தம் அபிப்பிராயங்களையே சொல்லி விவாதத்தை வளர்த்துவிட்டனரென்று சொன்னார். அவர் கூறியதாவது:— "சிறுபான்மை கட்சியார்கள் எல்லோரும் இப்பொழுது பெரும்பான்மையரான சிங்களவர்க்கு விரோதமாய் ஒன்று கூடிவிட்டனர். பெண்கள் வாக்குரிமை விஷயத்தில இரண்டொருவர்தவிர ஏனையோர் 21 வயதிற்கும் 30 வயதிற்கும் உட்பட்டவர்களுக்கும் வாக்குரிமை யளிக்கவேண்டுமென்று ஒப்புக் கொள்ளுகின்றனர். நடவடிக்கைகளைக் கவனிக்கப் பெண்டிர் பலர்வந்திருப்பதிலிருந்தே அவர்கள் இவ்வுரிமை பெற ஏற்றவர்களென்பதைக் காட்டுகின்றது.

### சிங்களவர்க்குப் படிப்பினை

"சென்ற நான்கு வருஷங்களுக்கிடையில் சிங்களவர்களெல்லோரும் (ஒருவர் நீங்கலாக)ஒன்றாய் ஐக்கியப்பட்டசமயம் இது ஒன்றே. பெரும்பான்மையான சிங்களவர் ஒன்று கூடியிருப்பது தங்கள் நலம்பேணுவதற்குமட்டுமென்று; இத்தேசத்தைப் பாதுகாக்கவுமாகும். இந்தப்படிப் பினையைச் சிங்களவர்கள் மறந்துவிடக்கூடாது."

### திரித்துப் பொருள்கொள்ளுதல்

"என் தீர்மானத்தின் இரண்டாம் பகுதியைச்சிலர் உணர்ந்து கொள்ளவில்லை, மற்றும் சிலர் குறித்த காரியத்திற்காகத் திரித்துப் பொருள் கொண்டிருக்கின்றனர். 'இலங்கை இந்தியன்' என்றபத்திரிகையில், இத்தீவு முழுவதையும் தங்கள் கைக்குள் அடக்கி வைத்துக்கொண்டிருக்கும் ஒருகுழுவைச் சார்ந்தவர் நான்என்று எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் தோட்டக்கார— ராஜதந்திரி என்றும் வேறுசில பெயர்களாலும் அழைக்கப்படுகிறேன். நான் அவ்வினங்களைச் சார்ந்தவனில்லை. நான் மெய்ப்பாடுபட்டுக்காலந் தள்ளும் ஒருவன். எனதுதோட்டங்களில் நான் இந்தியக்கூலிகளை வைத்துக் கொள்ளாதது அவர்கள்மேல் வெறுப்புக்கொண்டல்ல— ஆனால் என் தேசத்தாருக்குத் தொழில் கொடுக்கவேயாகும். உலகத்தில் கற்றவரினத்தில் கியாதிபெற்ற ஒரு ஆசிரியர் நான் இந்தியருக்கு 'ஓட்' உரிமை இல்லாது செய்யமுனைந்து நிற்பதாயும், இந்தியர்களுக்கு எதிரேநான் இரட்டைக்குழலுள்ள துப்பாக்கியை வைத்துக் கொண்டிருப்பதாயும் ஒருபத்திரிகையில் எழுதியிருக்கிறார். நான் அவற்றை முழுவதும் மறுக்கிறேன்.

### விதை ஊன்றியவர்கள் யார்?

"இந்நாட்டவர்க்கும் இந்தியர்க்கும்பேதம் கற்பிக்கப்பட்டு விரோதமூட்டப்படுவதாய்ப் பலர் கூறுகின்றனர். இந்தப்பேத புத்திக்குக் காரணமாயிருந்தவர்கள் கமிஷனர்களே. அவர்கள் தான் 5— வருஷவாசத்தை நிபந்தனையாக முதலில் குறிப்பிட்டனர். இந்த நிபந்தனை இந்தியருக்கு மட்டுமில்லாமல் எல்லா வெளிநாட்டாருக்கும் உண்டு. இது அமுலுக்கு வரமுடியாது. இதனால் பொது ஜனவாழ்வுக்கு மிகுதியான இடைஞ்சலே விளையும். என் தீர்மானத்தில் இந்நிபந்தனையின் தத்துவத்தை ஒப்புக்கொண்டு படிப்புநிபந்தனையையும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. படிப்பு நிபந்தனையாவது தங்கள் சொந்தபாஷையில்எழுதப்படிக்கத் தெரியவேண்டுமென்பதே. குறிப்பிட்ட ஒருபாஷையாயில்லாததால் இந்திய வாக்காளர்க்கு இதில் தீங்கில்லை. நிபந்தனையை அமுலுக்குக் கொண்டுவர நான் வழிசெய்கிறேனேஒழிய 'இரட்டைக்குழல் துப்பாக்கி'யைவைத்துக் கொண்டு நான் பயமுறுத்தவில்லை. தீங்கிழைப்பவைகள் சட்டசபைக்கு வெளியிலுள்ளவர்கள் பேச்சும் எழுத்துமேயாகும்."

### ஐரோப்பியர் நிலை.

"கமிஷனர்களுடைய திட்டம் ஒப்புக்கொள்ளப்படின் நூற்றுக்குத் தொண்ணூறு ஐரோப்பியர் வாக்குரிமையை இழந்துவிடுவார்கள். ஏனெனில் அவர்களிற் பெரும்பாலார் வெளிநாட்டிற்குச் சென்றால் 8-மாதத்திற்குள் திரும்பிவிடுவதில்லை. 8—மாதத்திற்கு மேல் வெளியே சென்றிருந்தவர்களுக்கு 'ஓட்' உரிமை யில்லாது போய்விடும்".

இரண்டாவது இந்திய அங்கத்தினர் அவருடைய தீர்மானத்தின் ஒரு பாகத்தால் இந்திய வர்த்தகரையும், மற்றைப் பாகத்தால் இந்தியத் தொழிலாளரையும் உரிமையின்றி ஒதுக்குவதற்கு முயற்சிப்பதாய்க் கூறியது உண்மையில்லையென்றும் தாம் இந்திய வர்த்தகர்க்கு உரிமை வழங்கவேண்டியே தீர்மானத்தை அவ்வாறு அமைத்திருப்பதாயும் மிஸ்டர் மொல்லமூறே எடுத்துக் கூறினார். தன்னைப்பற்றிக் குறைகூறியவர்களுக்கு மறுப்பாக அவர் வெளியிலிருந்து வந்து இங்கு காரியத்தோடு தங்கியிருக்கும் சிலர் பத்திரிகைகளில் எழுதியவற்றின் மூலமே சமூக வேற்றுமை உணர்ச்சி அதிகமாவதாய்க் கூறினார். இலங்கையிலிருந்து ஒருவரையும் வெளியேற்றத் தமக்கு எண்ணமில்லையென்றும்' ஆனால் இலங்கையைப் பாதுகாப்பதே தம் நோக்கமென்றும் அவர் உரைத்தார்.

### ஏழைகள் வேண்டுவதென்ன?

பின்னர் மிஸ்டர். பிரீமன் பேசுகையில் வாக்குரிமைக்கு சொத்துநிபந்தனை கூடாதென்றும், பாமரர்—கிராமவாசிகள் முதல் யாவருக்கும் 'ஓட்' உரிமை வழங்கினாலொழிய ஏழைகள் முன்னேற வழியில்லையென்றும் கூறினார். கமிஷனர்களே தங்கள் யாதாஸ்தின் 86—வது பக்கத்தில் கூறியிருந்தபடி பொது ஜனங்களுக்கு மிக முக்கியமான உரிமைகளில் ஒன்றான வாக்குரிமை யாவருக்கும் வழங்கப்படில் இந்தத் தீவிலுள்ள பெரும்பாலான ஜனங்கள் தங்கள் குறைகளை நிவர்த்தித்துக்கொள்ளவும், சுய மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளவும் வழியேற்படுமென்பதையும் அவர் எடுத்துரைத்தார். இதன்பின் மிஸ்டர் வில்வாவின் திருத்தப்பிரேரபனை ஓட்டுக்கு விடப்பட்டுத் தோற்றுப்போயிற்று.

### மற்றொரு திருத்தம்

மிஸ்டர் தம்பிமுத்துவின் திருத்தப்பிரேரபனை பின்னர் ஓட்டுக்குவிடப்பட்டது. அதன் நோக்கம் மூலத் தீர்மானத்தில் ஒவ்வொரு ஓட்டரும் ஆங்கிலம், சிங்களம், தமிழ் அல்லது வேறு தன் தாய்ப் பாஷையில் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் என்பதில் 'அல்லது வேறு தன் தாய்ப் பாஷையில்' என்பதை எடுத்துவிட வேண்டுமென்பது. இவ்வாறில்லாது போனால் ஒரு சைனாக்காரி கூட 'ஓட்' உரிமை பெற்றுவிடக்கூடுமென்பதை மிஸ்டர் தம்பிமுத்து விளக்கிக் கூறினார். அவர் திருத்தத்திற்கு 17—பேர் சாதகமாயும் 14-பேர் பாதகமாயும் ஓட்டுக்கொடுத்தால் அது நிறைவேறியது.

### பெண்கள் உரிமை.

மிஸ்டர் துரைசாமி தீர்மானத்தின் (ஏ) பிரிவிற்குக் கொண்டுவந்த திருத்தப் பிரேரபனை ஓட்டுக்கு விடப்பட்டுத் தோற்றுப்போயிற்று. பிரேரபித்தவர் ஒருவரே அதற்குச் சாதகமாயிருந்தார். அத்திருத்தம் 21 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்குக் கல்வி நிபந்தனையின்மேல் ஓட் உரிமை யளிக்கவேண்டுமென்பது.

பின்னர் மிஸ்டர் மொல்லமூறேயின் மூலத் தீர்மானத்தின் (ஏ) பிரிவு ஓட்டுக்கு விடப்பட்டது. "மாதர்களுக்கு ஓட் உரிமைக்கு 21-வயதாயிருக்கவேண்டும்—30 அல்ல" என்பதே அப்பிரிவு. அத்தீர்மானம் 28 உத்தியோகப்பற்றில்லாத பெரும்பான்மையான அங்கத்தினர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு நிறைவேறியது.

### இலங்கையரல்லாத பிரிட்டிஷ் குடிகள்.

மிஸ்டர் மொல்லமூறேயின் தீர்மானத்தின் (பி) பகுதி அதிக விவாதத்திற்கு இடமாயிருந்தது. அது வருமாறு:—

இலங்கையரல்லாத பிரிட்டிஷ் பிரஜைகள் ஓட்டர்களாகப் பதிவுசெய்துகொள்ளவேண்டுமென்றால்:—

(1) இந்தத்தீவில் அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு ஆண்டு வசித்திருக்கவேண்டும்,

(2) ரூபாய் 500 பெறுமான ஸ்தாவர சொத்து வைத்திருக்கவேண்டும்,

(3) அல்லது மாதந்தோறும் ரூபாய் 50 வருமானமிருக்கவேண்டும்,

(4) இத்தீவின் பாஷைகளாகிய ஆங்கிலம், சிங்களம் அல்லது தமிழ் எழுதப்படிக்கத் தெரிந்திருக்கவேண்டும்.

குடியேற்றநாட்டுக்காரியதரிசி (கலோனியல் ஸெக்ரடரி): "கனம் அங்கத்தினருடைய கருத்து இதுதான—'வாக்குரிமையைப் பெருக்கி வழங்குவதற்கு டோனமூர் கமிஷனுடைய சிபார்சைப் பின்கண்ட நிபந்தனையுடன் இச்சபை ஒப்புக்கொள்ளுகிறது. பெண்கள் வாக்குரிமை நிபந்தனையில் வயது 21—க்குக் குறைக்கப்படவேண்டும். மற்ற ஓட்டர்களுக்குக் கமிஷனின் நிபந்தனைகளோடு படிப்பு நிபந்தனையும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். அதாவது கமது நிபந்தனைகளாவன: ஒவ்வொருவருக்கும் 5 வருஷ வாசமும், 21 வயதும், படிப்பு நிபந்தனையும். 5-வருஷம் வசிக்காதவர்களுக்கு அவர்கள் பிரிட்டிஷ் பிரஜைகளாயிருந்தால் சொத்து, படிப்பு முதலிய நிபந்தனைகள் நிறைவேறியிருந்தால் ஓட் உரிமை பெறுவார்கள்".

# குடியேற்ற நாடுகளின் காரியதரிசி தடை.

—0—

## சீர்திருத்தயாதாஸ்த்தில் மாற்றம் கூடாது.

சென்ற வியாழக்கிழமை மாலை வாக்குரிமை விஷயமாகத் தீர்மானிக்கப்பட்ட பிறகு கலோனியல் செக்ரடரியான மிஸ்டர் பினெச்சர் குடியேற்ற நாடுகளின் காரியதரிசி மேன்மைதங்கிய கவர்னரவர்களின் மூலம் சட்டசபைக்கு அனுப்பிய செய்தியைப் படித்தார். சட்டசபையில் முன் நடந்த விவாத விஷயங்களைக் கவர்னரின் தந்தியின் மூலம் அறிந்த காரியதரிசி அனுப்பிய செய்தியின் விவரமாவது:—

"கமிஷன் செய்திருக்கும் சிபார்சுகள் ஆத்திரத்தோடு நடத்திய முழு விசாரணையின்மேலும், எல்லோருடைய சாதகபாதகங்களையும் அறிந்து கொண்டதன்மேலும் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். என் அபிப்பிராயப்படி சிபார்சுகளை முழுதும் ஒன்றுசேர்த்தே பார்க்க வேண்டும். அவற்றை அமுலுக்குக் கொண்டுவருவதில் சில முக்கியமான திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் திட்டத்தின் ஏற்றத் தாழ்வில்லாத சமநிலை மாறிவிடும்படி தத்துவத்தில் மாற்றம் செய்வதற்கு நான் உடன்பட மாட்டேன். இலங்கை— வாசிகளிற் பெரும்பாலார் திட்டமுழுவதையும் அமுலுக்குக் கொண்டுவர சந்தர்ப்பமளிக்க ஒப்புக் கொள்ளாவிடில், அரசியல் அமைப்பை மாற்ற வேண்டிய விஷயம் மறுபடி அடியிலிருந்து ஆரம்பம் செய்யவேண்டுமென்ற அவசியம் எனக்கு ஏற்படும். அப்படியானால் 1923—ம் வருஷத்துக்கவுன்ஸில் சட்டப்படியே புதியசட்டசபைத்தேர்தல் நடக்க வேண்டியிருக்கும் அதற்குள் நிலைமையைப்பரிசீலனைசெய்து அமுலுக்குக் கொண்டுவர முடியுமென்றால் ஆரம்பகாரியங்கள் முடிவதற்கு அவசியமானால் இப்பொழுதுள்ள சபையை இன்னும்சிறிது அதிகமானகாலம் நடைபெறும்படி நான்வேண்டிய ஏற்பாடுசெய்ய வேண்டும். கமிஷன் முடிவில் பூர்ணப் பொறுப்பாட்சி தற்போதைய நிலையில் முற்றும் சாத்தியமில்லாதது என்று கூடியிருப்பதை நான்முற்றும் ஒப்புக் கொள்ளுகிறேன். கமிஷன் திட்டத்தை ஒப்புக்கொள்ளாது மறுப்பதானால் பொறுப்பாட்சி யளிக்கப்படுவதைத் துரிதப்படுத்தும் என்று நான் எவ்வித நம்பிக்கையும் கொடுக்க முடியாது."

இச்செய்தி கவனருக்கு முன்னமே கிடைத்திருப்பினும் விவாதத்திற்கு இடையில் அது கொடுக்கப்படவில்லை. கவர்னர் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர்களைத் தம்முடன் கலந்துபேச அழைத்திருக்கிறார்.

## ஜப்பான் சக்கரவர்த்தியின் மகுடாபிஷேகம்.

சமீபத்தில் ஜப்பான் புதிய மன்னரின் முடிசூட்டு வைபவம் வெகு விசேஷமாக நடந்தது. அதற்குச் சுமார் 8—கோடி ரூபாய்க்குமேல் செலவழிந்திருக்கிறதாம். மகுடாபிஷேகத்தை முன்னிட்டுக் கல்கத்தாவிலுள்ள ஜப்பான் ஸ்தானீகர் 14—உ மாலை ஒரு விருந்து நடத்தினார். அதற்கு கவர்னர் ஸர். ஸ்டான்லி ஜாக்ஸனும் மற்றும் பெரிய பெரிய உத்தியோகஸ்தர் பலரும் விஜயஞ் செய்திருந்தனர். அப்பொழுது ஸ்தானீகர் ஜப்பானுடைய ராஜ வம்சத்தைப் பற்றிச் சொன்னதாவது:— ஜப்பான் ஏகாதிபத்தியம் தோன்றியதிலிருந்து அரச வம்சத்தில் ஏற்பட்ட மாறுதல்களால் தேசத்தில் எவ்விதப் புரட்சியும் தோன்றவில்லை. இதிலிருந்து அரசர்கள் குடிகளுடன் எவ்வளவு நெருங்கிய தொடர்புடையவர்களென்பது தெரியும். 25—நூற்றாண்டுகளாக எவ்வித ராஜ்யப் புரட்சியுமில்லாத வேறு நாடு இல்லை என்று நாங்கள் பெருமைகொள்ளலாம்.

---

### சட்டசபையின் முடிவு

மிஸ்டர் மொல்லமூறே இதைச் சம்மதித்தபின் காரியதரிசி திருத்திய தீர்மானம் ஓட்டு விடப்பட்டுத் தோற்றுப்போயிற்று. பின்னர் மிஸ்டர் மொல்லமொறேயின் மேற்கண்ட தீர்மானம் விவாதிக்கப்பட்டு நிறைவேறியது. 17 பேர் சாதகமாயும் 11 பேர் பாதகமாயும் ஓட் செய்தனர்.

## இந்தியச் செய்திகள்.

கான்பூர் நகரபோலீஸார் தீபாவளிய ன்று சூதாடியதாக 430 பேர்களைப் பிடித் திருக்கின்றனர். சூதாட்ட சட்டத்தின் 3, 4- வது பிரிவுகளின்படி குற்றஞ்சாட்டப்ப ட்ட 38 கூட்டத்தாருக்கு மேல் விசாரணை யில் இருக்கின்றனராம்.

நாகூர் ஆண்டவன் மசூதியில் வழக்கம் போல் கந்தூரி ஆரம்பித்திருக்கிறது. இம் மாதம்26--ம் தேதிவரை விழா நடைபெறும்.

டில்லியில் நடக்கும் ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை காரியாலத்தில்மெஷினில் வேலைசெய்துகொண்டிருந்த ஒருவன் அதில் விழுந்து இறந்துபோனான். காரணம் தெரிய வில்லை.

பம்பாய் கவர்னர் ஸர்லெஸ்லி வில்ஸ ன் டிஸம்பர் 8–ம் தேதி இங்கிலாந்து போ குறார். புதிய கவர்னர் ஸர்பிரடரிக் ஸைக்ஸ் இ அம்மாதம் 7– ம் தேதி பம்பாய்க்கு வரு கிறார்.

திருவாங்கூரைச் சேர்ந்த கோட்டயம் மிஸ்டர் ஜான் குரியன் புன்செய் நிலங்களை உழுவதற்கு ஒருபுதிய இயந்திரம் கண்டுபிடி த்திருக்கிறார்.

குருக்ஷேத்திலிருந்து திரும்பிவந்த யா த்திரிகர் கூட்டத்தில் 12–பேர் கீழேதள்ளி மிதிக்கப்பட்டுக் காயமடைந்தனர். அதில் இ ருவர் மரணமடைந்தனராம்.

விருதுநகர் முனிஸிபல் சேர்மன் தேர் தல் நடந்தபொழுது மாஜி சேர்மன் ஜனுப் மகம்மது இப்ராகிம் சாகிப்மீது ஏராளமான கல்லெறி விழுந்தது. அவர் தற்காப்புக்காக க்கைத்துப்பாக்கியால் ஆகாயத்தைப் பார்த் துச் சுட்டதினால் கூட்டம்கலைந்து, வீடுபோ ய்ச் சேர்ந்தாராம்.

சென்னைக் கார்பொரேஷனுக்குத் திரு ஏ. ராமஸாமி முதலியார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். 'ஜஸ்டிஸ்' பத்திரிகையின் திறமைவாய்ந்த ஆசிரியரா ன திரு முதலியாரவர்கள் காலத்தில் மிகுந் த நன்மை விளையுமென்று நம்பப்படுகிறது.

கல்கத்தாவில் அடுத்தமாதம் கூடப் போகும் காங்கிரஸ் மகாசபையோடு சுதேச ப்பொருள் கண்காட்சியும் நடைபெறும். வைதீக ஒத்துழையாதார் சிலர் அதற்கு ஒப் புக்கொள்ளாது தங்கள் கதர் ஆடைகளையனு ப்பஇசையவில்லையாம்.

லாகூர் 'பொதுஜன ஸ்டிரீயர் சங்கத்தி ன் வாசகசாலைக்கு ரூபாய் 40,000 பெறு மான ஒருபுதிய கட்டிடம் அமைக்கப் போ கிறார்கள். 1920 ல இச்சங்கம் மகாத்மாஜி யால் திறந்து வைக்கப்பட்டது. திரு. லஜ பதிராய் இதன் தலைவர். புதிய கட்டிடத் திற்கு அவர்பெயரே இடப்படும். இதுவரை ரூபாய் 17,500 வசூலாயிருக்கிறது. இதற் குப்பணம் அனுப்புபவர்கள் லாகூரில் கோர் ட்டுத் தெருவிலுள்ள ஷி சங்கக்காரியதரிசி க்கு அனுப்பவேண்டும்.

தீவிர தேசாபிமானியும், 'தக்ஷிண இந் தியா' என்ற ஆங்கிலப் புத்தகத்தின் ஆசி ரியராயுமுள்ள திரு சி. எஸ். ரெங்கய்யர் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டந்தஸ்து வேண்டுமென்பதைப்பற்றி ஒரு புதிய புஸ் தகம் எழுதியுள்ளார். அதில் சுதேச ராஜ்ய ங்களைப்பற்றி எழுதியிருக்கும் முன்னுரையி ல், "முக்கியமான சில சமஸ்தானங்கள் த விர மற்றவைகளில் வருமானம் சிர்கேடா டமான முறையில் செலவழிக்கப்படுகிறது; அவற்றில் நியாய விசாரணையும் ஒழுங்கு தப் பி நடைபெறுகிறது" என்று கூறியிருக்கி றார்.

சமீபத்திலகூடிய கூர்க் சட்டசபையி ல் சைமன் கமிஷனை பஹிஷ்காரம் செய்த தனிடம் நம்பிக்கையில்லையென்ற ஒரு தீ ர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

சைமன் கமிஷன் நடவடிக்கைகளை கூடவிருந்து வெளியிடப் பிரசுரம் செய்ய கூடாதென்று 'பிரீ பிரஸ்'ஸுக்கு ஏற்பட டிருந்த தடை நீக்கப்பட்டிருக்கிறது. பிரீ பிரஸ் மானேஜர் இனி அந்தரங்கமென ஸர். ஜான்சைமன் கருதும் விஷயங்களை பிரசுரிப்பதில்லையென்று ஒப்புக்கொண்டிரு க்கிறார்.

---


வாசகர்களுக்கு:—

இலங்கை இந்தியனில் விளம்பரம் செய்யும் வர்த்தகர்களுக்கு ஆடர்செய்யும்பொழுது எமது பத்திரிகையைத் தயவு செய்து குறிப்பிடவும்.


AMERICAN

EVEREADY

FLASHLICHTS & BATTERIES.



அமெரிக்கன்

எவர்ரெடி

தூரதிருஷ்டி காந்ததீபங்களும்


பாட்ரிகளும்

இந்த காந்தவிளக்குகள் எல்லாவிடங்களிலும்

விற்கப்படுகின்றன.

எல்லா தினுசுகளிலும் அளவுகளிலும் கிடைக்கும்.


இரவுகாலங்களில் நீங்கள் எங்கே போக நேர்ந்தாலும் ஒரு அமெரிக்கன் எவர் ரெடி காந்தவிளக்கை எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் சௌகரியத்தை தரக்கூடியது. நம்பிக்கையானதும எவ்வித ஆபத்தும் வாரதபடி பாதுகாக்கக் கூடியதுமான காந்த விளக்கு இதுவே.



எப்பொழுதும் உங்கள் காந்தவிளக்குகளுக்கு அமெரிக்காவில் தயார்செய்யப்பட்ட

'யூனிட்ஸெல்'லுகளையே

உபயோகியுங்கள். அவைகள்தான் நீண்டகாலம் உழைக்கக்கூடியவை.




டாஜ் அண்ட் ஸெய்மூர் லிமிட்டெட்,

28, சத்தாம் வீதி, கோட்டை, கொழும்பு

DODGE & SEYMOUR Ltd,

28, CHATHAM STREET, FORT

COLOMBO.





உயர்தரமான சோப்புகளில்

முதன்மையானதெனக்கியாதி பெற்ற

ஜார்ஜ் டிரூலியின்

லயன் சோப்




பரிசுத்தமானது; சரீரத்திற்கு அழகையும், பட்டுப்போன்ற மிருதுத் தன்மையையும் கொடுக்கக் கூடியது.


A. V. R. A. Adycappa Cherty

COLOMBO (... 5)



"ஆர்கையில்"

துவிசக்கிர (சைக்கிள்) வண்டிகள்



இலங்கையில் மிக குறைந்த

விலைரூபாய் 85-00

சிறு தொகை பணம் கட்டி சைக்கிள்கள் வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்கிறோம்.

HOARE

& CO (ENGINEERS) LTD

தபால் பெட்டி நெ. 22

கொழும்பு.

ஆர்டர் கொடுப்பவர்கள் இப்பத்திரிகையை குறிக்கவும்.

எல்லா தாய்மார்களுக்கும்

சிறந்த புத்திமதி இதுவே

நீங்கள் பிரசவித்த பின் பலமற்றவர்களாகவும், பலத்தை இழந்தவர்களாகவும் தோன்றினல் ஏமாந்தவரைப் போல இராதீர்கள். நீஙகள் இழந்த பலத்தையும், தேக வலிமையையும் மறு முறையும் நீங்கள் நிச்சயமாய் அடையலாம் இதற்குக் கைகண்டது "ஹக்கோஸன்" ஒன்றே மற்றவைகளினல் யாதொரு பிரயோஜனமும் ஏற்படாது.




தேகத்திற்கு உற்சாகத்தையும் சுறு சுறுப்பையும் கொடுக்கக் கூடியது இந்த டானிக் ஒன்றே. இச்சிறந்த டானிக் ஜீரணசக்தியை அதிகப்படுத்தி ரத்தத்தைச் சுத்திசெய்கிறது.

பல பிரமிக வைத்தியர்களால் இது மிகவும் மேலானதெனச் சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

# இந்தியர்களே! சற்றுகவனியுங்கள்!

—oo—

## 'இலங்கை இந்தியன்' பத்திரிகைக்கு நீங்கள் ஏன் சந்தாதாரராக சேர வேண்டும்? என்பதற்கு காரணங்கள் ஆறுஉள. அவை:—

1. இலங்கையில் இந்தியர்களுக்காக ஊக்கத்துடன் உழைக்கும் தமிழ்பத்திரிகை இது ஒன்றே.

2. இப்பத்திரிகை நடத்துவதில் உடமஸ்தருக்கு ஏற்படும் தியாகத்தையும் பணநஷ்டத்தையும் பொருள் படுத்தாது இந்தியரின் நலத்தையே முக்கிய நோக்கமாக கருதி இப்பத்திரிகை பாடுபட்டு வருகிறது.

3. இப்பத்திரிகையின் அபிப்பிராயங்கள் இந்தியா கவர்மென்டாலும் இலங்கை கவர்மென்டாலும் நன்குமதிக்கப்படுகின்றன.

4. இப்பத்திரிகையானது இத்தீவிலுள்ள இந்தியரின் மனோபாவத்தையும் அவரது அபிப்பிராயங்களையும்உள்ளவாறே விளக்கி காட்டுகின்றது.

5. பத்திரிகை பிரசுரிப்பதி லேற்படும் செலவுர்குமட்டும் போதுமானபடி பத்திரிகையின் சந்தா மிககுறைவாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் சிறிதும் தாமதமின்றி, இத்துடன் சேர்த்திருக்கும் பாரத்தை பூர்த்திசெய்து எங்களுக்கு உடனே அனுப்புங்கள்!

6 இப்பத்திரிகையை ஓர் பிழைக்கும் வழியாகக் கருதி இதன் சொந்தக்காரர் நடத்திவரவில்லை. அவர் தன் செலவுகளை நிர்வகிக்கும் பொருட்டு இதனை நடத்தவுமில்லை. தனக்கேற்பட்டுள்ள சொந்தத் தொழிலில் அரும்பாடுபட்டுச் சேர்க்கும் பொருளையே அதன் மூலதனமாக வைத்து அதனை நடத்திவருகிறார். தனது தொழிலி லீடுபட்டு சுலபமாக பணத்தைத் தேடுவதற்குரிய நேரத்தையும் அதற்காகவே தியாகம் செய்துவருகிறார்.

சந்தாதாரராக சேருவோர் தயவுசெய்து கீழ்க்கண்ட துண்டைப் பூர்த்திசெய்து அனுப்புங்கள்.
"இலங்கை இந்தியன்" மனேஜரவர்களுக்கு,
107,B, ஹல்ஸ்டார்ப் தெரு, கொழும்பு.

சந்தா விபரம்-

—o—

| | | |
|---|---|---|
| இந்தியா, இலங்கை முதலிய விடங்களுக்கு | வருட சந்தா | ரூ. 5-00. |
| | 6 மாதச் சந்தா | ,, 3-00. |
| வெளி நாடுகளுக்கு | வருட சந்தா | ரூ. 6-00. |
| | 6 மாதச் சந்தா | ,, 3-50. |

ஐயா,

அடியிற் கையொப்பமிட்ட என்னைத் தங்களுடைய "இலங்கை இந்தியன்" தமிழ் வாரப் பத்திரிகைக்கு ஒரு வருட / 6 மாத சந்தாதாரராகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஒப்பம்..................................................

பெயர்..................................................


விலாசம்..................................................

..................................................

குறிப்பு:- தயவுசெய்து பெயரையும், விலாசத்தையும், தெளிவாக எழுதியனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்

Printed and published for the Proprietor by H. Nallish B. A. [residing at 97 Mtliban St. Colombo] at ,,Ceylon Indian" Printing 107B. Hulftsdorp Street, Colombo.

## புதிய டூரிங் கார்



### உங்களுடையது

**ரொக்கம் ரூபாய் 2450**

அல்லது

முதலில் காரைப் பெற்றுக்கொள்ளும்பொழுது (இன்ஷூரன்ஸ தொகை தவிர) ரூபாய் 800-ம் செலுத்தி மீதி தொகையை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 164 வீதம் 11 மாதமாகவும் செலுத்த வேண்டும்.

உங்கள் பக்கத்திலுள்ள போர்ட் வியாபாரிக்காவது விலோன் டிஸ்ட்ரிப்யூட்டர்களுக்காவது எழுதி விவரங்கள் தெரிந்து கொள்ளவும்.

பியேர்ஸ், லெஸ்லி அண்ட் கொம்பனி,
பெயர்பீல்ட் ஹவுஸ், யூனியன் பிளேஸ்
கொழும்பு.

## கோல்கேட் ஆக்டகன் சோப்

மிகவும் உபயோகமானது.




### உலகப் பிரசித்திபெற்ற ஆக்டகன் சோப்

வஸ்திரங்கள் சுத்திசெய்வதற்கும் மற்றும் வீட்டில் எப்பொழுதும் உபயோகிப்பதற்கும் மிகவும் அருமையானது.

**ஆக்டகன் சோப்**

எந்த ஜலத்திலும் உபயோகிக்க கூடியது. மிக மெல்லிய வஸ்திரங்களுக்கும் யாதொரு கெடுதியும்செய்யாதுள்ளது. அழுக்கையும் மிக சுலபமாகப் போக்கக்கூடியது.

**மூன்று சிகப்புப்பட்டைகளுள்ள காகிதத்தில் சுத்தியிருக்கும் ஆக்டகன்சோப்பைக்கவனித்துவாங்குங்கள்.**

அக்காகிதங்களை கவனமாய் சேர்த்து வையுங்கள். அவைக்குப் பதிலாக தக்க பரிசுகள் கிடைக்கும்.

**ஆக்டகன்கூப்பன்களை சேர்த்து வையுங்கள்.**

விலையுயர்ந்த பரிசுவிபரங்களை அடங்கிய நேர்த்தியான கேட்லாக் கேட்போருக்கு இனமாக அனுப்பப்படும்

சோல் ஏஜண்டுகள் :

**A. V. R. A. Adycappa Chetty,**
15, Sea Street, COLOMBO.

**A. M. Othuman Pillai,**
24, Keyser Street, COLOMBO